Registered as a News Paper in Sri Lanka

# கண்ணோட்டம்

கண்ணோட்டம் KANNOTTAM

வெளியீடு-24 01 மே 2005 விலை:- 07.00

பாசிசத்திடம் மக்கள் மீதான அதிகாரம் சட்டபூர்வமாக கையளிக்கப் படுமானால் அங்கு சாவுத்தொழிற் சாலைகள் உருவாக்கப்படும். இது வரலாற்றின் அனுபவம்.

# மேதின அறை கூவல் 2005

## ஈ.பி.ஆர்.எல்.எவ்– பத்மநாபா

மனித குலத்தின் இதுவரை கால வரலாறு வர்க்கப் போராட்டத்தின் வரலாறே என்று கார்ல்மாக்ஸ் தனது புகழ்பெற்ற கம்யூனிஸ் கட்சி அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

பின்தங்கியதிலிருந்து முன்னேறியதற்கு, காட்டுமிராண்டித் தனத்திலிருந்து நாகரீகத்துக்கு சுரண்டலில் இருந்து சுரண்டலற்ற சமுதாயத்துக்கு, ஒடுக்குமுறையிலிருந்து ஒடுக்குமுறையற்ற புதியதொரு உலக ஒழுங்கிற்கு என மனிதகுலம் மாற்றம் பெற்று வந்துள்ளது.

1880 களின் பிற்பகுதிகளில் ஈவிரக்கமற்று ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் நேரகால வரையறையின்றி சுரண்டப்பட்ட தொழிலாளர் வர்க்கம் ஆங்காங்கே தன்னெழுச்சியாக போராட்டங்களை நடாத்தி வந்திருக்கிறது.

இங்கிலாந்தில் சாட்டிஸ்ற் இயக்கம் தொழிற்சாலைகளை எரிப்பது அல்லது தொழிற்சாலை இயந்திரங்களை சேதமாக்



குவது என தனது எதிர்ப்பைக் காட்டியது, பின்னர் போராட்ட அனுபவங்களின் அடிப்படையில் தன்னை பல்வேறு தொழிற்சாலைகளிலும் நாடுகளிலும் ஒழுங்குபடுத்தத் தொடங்கியது கார்ல்மாக்ஸ், எங்கல்ஸ் போன்ற தத்துவ அறிஞர்கள் தொழிலாள வர்க்கத்தின் போராட்டங்களுக்கான வழிகாட்டி நெறிகளை வழங்கினர். கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையும் வரலாற்றின் தேவையாக உருவாகிது.

மாக்ஸிஸசம் சமூக பொருளாதார பிரச்சினைகளை அதுவரைகாலமும் அணுகப்பட்ட முறைகளுக்கு மாறாக விஞ்ஞான பூர்வமாக அணுகியது.

மனித குலத்தின் வரலாற்றில் வெவ்வேறு காலகட்டங்களில் ஒடுக்கப்பட்டவர்களின் கிளர்ச்சிகளை நாம் காணலாம். ரோமானியப் பேரரசின் அடிமை யுகத்தின் ஸ்பாட்டகஸ் கிளர்ச்சியை அவதானிக்கலாம்.

1800களின் நடுப்பகுதிகளில் பிரெஞ்சுப் புரட்சியை நாம் அவதானிக்கலாம், தொழிலாளி வர்க்கம் 72 நாட்கள் தனது ஆட்சி அதிகாரத்தை தக்கவைத்ததிருந்தது.

இதேபோன்றுதான எட்டு மணிநேர வேலை கோரி சிக்காக்கோ வீதிகளில் தொழிலாளர்கள் தமது இரத்தம் தோய்ந்த கொடிகளை தூக்கி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

உலகின் பல்வேறு முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளர்கள் கிளர்ச்சிகளை நடத்திக் கொண்டிருந்தார்கள். இந்தக் கிளர்ச்சிகளின் வெற்றியாகவே எட்டு மணி நேர வேலை என்பது அங்



தோழர் இரா. துரைரெத்தினம் சிறுவர் சிறுமியருக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்குகையில்

கீகரிக்கப்பட்டது, படிப்படியாக உலகம் பூராகவும் தொழிலாளி வர்க்கத்தின் அழுத்தத்தினால் எட்டுமணிநேர வேலையென்பது சட்டபூர்வமாக்கப்பட்டது. தொழிலாளர்கள் எட்டுமணிநேர உரிமையை பெற்ற அத்தினத்தையே நாம் மேதினமென நினைவு கூருகிறோம்.

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள் உலகை ஈவிரக்கமற்ற சுரண்டலுக்காக பங்குபோட்டிருந்தன. 1800களின் பிற்பகுதிகளிலும் 1900 முற்பகுதிகளிலும் சீனாவில் சஞ்யாட்சனும், தென்னாபிரிக்காவிலும் இந்தியாவிலும் காந்தியடிகளும் தேசிய சுதந்திரத்துக்காக தலைமையேற்று போராடினார்கள். ஆசிய, ஆபிரிக்க,லத்தீன் அமெரிக்க நாடுகள் பலவற்றின் தேசிய சுதந்திரத்துக்கான போராட்டங்கள் நடைபெற்றன. இந்த

தொடர்ச்சி 2ம் பக்கம்

# கிழக்கின் மனித உரிமை மீறல்கள் பற்றி சொல்ஹெய்மிடம் எடுத்துரைப்பு

தோழர் துரைரட்ணம் 19.04.2005 அன்று நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்மை மட்டக்களப்பு யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் சந்தித்து உரையாடினார். இக்கலந்துரையாடலின்போது கிழக்கில் நடைபெறும் படுகொலைகள் நிறுத்தப்படவேண்டும் என்றும் புலிகளால் தற்போது கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப் பட்டிருப்பவர்கள் சித்திரவதை செய்யப்படுபவர்கள் உடனடியாக விடுதலைசெய்யப்படவேண்டும் என்றும் சிறுவர் சிறுமியரைப் படையணிகளில் சேர்ப்பது உடனடியாக முடிவுக்கு கொண்டவரப்படவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இதற்கு சோல்ஹெய்ம் "படுகொலைகள் நிறுத்தப்படவேண்டும் என்பதே தமது நிலைப்பா



டும் ஆகும் என்றும் இரண்டு தரப்பும் நிறுத்தவேண்டும்" என்றும் தெரிவித்தார்.

இச் சந்திப்பில் தோழர் பாஸ்கரன், தோழர் பத்மநாதன், தோழர் சந்திரன் ஆகியோரும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி- பத்மநாபா சார்பில் பங்கு பற்றியிருந்தனர்.


படுகொலைகள் பற்றி சொல்ஹெய்மிடம் பேசவேண்டும் என்று தோழர் துரைரட்ணம் அவர்கள் திரும்பத்திரும்ப யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுவிடம் வலியுறுத்திய போதும் பலத்த இழுபறியின் பின்னர் 15 நிமிடங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஓடுகாலித்தனமும் காரியாலய ஆக்கிரமிப்பு அராஜகமும்

ஈபிஆர்எல்எப்-பத்மநாபா இன் வவுனியாகாரியாலயம் சிலதினங்களுக்கு முன்னர் ஈபிடிபி காரியாலயம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இது ஜனநாயகம் பன்மைத்துவத்தை ஏற்றுக் கொள்பவர்கள் செய்யக் கூடிய காரியமல்ல. தமிழ் சமூகத்தினுள் புரையோடிப்போயுள்ள ஜனநாயக விரோத நிலைப்பாட்டின் ஒரு அங்கமே. ஒரு கட்சியில் இருந்து பிறிதொரு கட்சிக்கு செல்வதோ அல்லது முரண்படுவதோ ஜனநாயக சமூகத்தில் நிலவுவதே. ஆனால் ஓடுகாலித்தனத்திற்கும் இந்த செயற்பாட்டிற்கும் அடிப்படை வித்தியாசம் இருக்கிறது. இந்த ஆக்கிரமிப்பில் தமிழ் சமூகத்தில் நிலவும் அராஜகத்தின் சாயலே தெரிகிறது.

சுனாமி இலங்கையின் கரையோரச் சமூகங்களை காவுகொண்டு விட்ட காலத்தில், ஜனநாயக இடைவெளி வடக்கு கிழக்கில் காணாமல் போய்விட்ட காலத்தில் பெயர்ப்பலகையை காவித்திரிவதை,மற்றவர்களுடைய காரியாலயங்களுக்குள் நிறுவுவதை என்னென்பது. ஒருகட்சியில் இருந்து வெளியேறுபவர்கள் இன்னொரு கட்சியில் சேர்த்துக்கொள்வது வேறு. ஆனால் கட்சிகாரியாலயத்தின் பெயர்ப்பலகையை மாற்றுவது கபளீகரம் செய்வது ஜனநாயக நடைமுறை அல்ல. மாற்று என்பது இப்போதிருக்கும் ஜனநாயக விரோத முறைமையை மீண்டும் நிறுவுவதல்ல. நேர்த்தியான கொள்கை உள்ளவர்களை எத்தொகையினராயினும் பெயர்ப்பலகைகளால் விழுங்கிவிட முடியாது. தமிழ் சமூகம் உலகளாவிய அளவில் பரந்திருக்கிறது. ஜனநாயகம் மனித உரிமை சுதந்திரத்தை நேசிப்பவர்களும் அவ்வாறு பரந்து வாழ்கிறார்கள்.

# கண்ணோட்டம்



## ஜொயின்ற் மெக்கானிசம்

வடக்கு கிழக்கில் சுனாமி நிவாரணப்பணிகளை மேற்கொள்வதற்கான இணைந்த கட்டமைப்பொன்றை உருவாக்குவதில் அரசும் புலிகளும் இறுதிநிலையை எய்தியிருப்பதாக நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் சொல்ஹெய்ம் தெரிவித்திருந்தார். ஓரிரு வாரங்களிலோ ஒருமாதத்திற்குள்ளோ ஜொயின்ற் மெக்கானிசத்திற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்படலாம் எனத்தெரிவித்துள்ளார். சொல்ஹெய்ம் இங்கு வந்திருந்த நாட்களிலேயே அமெரிக்காவின் பிரதி ராஜாங்கச் செயலாளர் கிறிஸ்ரினாறொக்காவும் இங்கு வந்திருந்தார்.

சுனாமி நிவாரணப்பணிகளை முன்கொண்டுசெல்வதற்கு நிதி உதவிகளைப் பெறுவதற்கு ஜொயின்ற் மெக்கானிசம் அவசியம் என்றும் றொக்கா தெரிவித்திருந்தார். புலிகள் பயங்கரவாதத்தை கைவிட்டால் அவர்களின் மீதான தடை மீள் பரிசீலனை செய்யப்படும் என்று எடுத்துரைத்தார். அவர்கள் சொல்லிலும், செயலிலும் அதனைச் செய்தாக வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமைச் சந்தித்த சொல்ஹெய்ம் இந்த ஜொயின்ற் மெக்கானிசம் தொடர்பாக தெரிவித்தபோது இதற்கான பேச்சுவார்த்தைகளில் முஸ்லீம்களை சம்பந்தப்படுத்தவில்லை. அவர்களுடன் கலந்து பேசவுமில்லை என்று மனம் நொந்து கொண்டார்.

வடக்கு கிழக்கில் சுனாமியால் மரணித்த முஸ்லீம்கள் 60 வீதமானோர், பாதிக்கப்பட்டவர்கள் 50 வீதமானோர்.

சுனாமி நிவாரண மறு நிர்மாணப்பணிகளில் புலிகள் தமது தலைவிதியை நிர்ணயிப்பதை கிழக்கின் முஸ்லீம்கள் ஒருக்காலும் ஒப்புக் கொள்ளப்போவதில்லை. அதே போல் பிரபா அணிசார் புலிகளின் தொடாச்சியான படுகொலைகள், சுனாமி அகதிமுகாம்களில் சிறுவர் சிறுமியரை பிடித்துச் செல்வதாலும் மக்கள் பலத்த அசௌகரியங்களையும், சங்கடமான நிலைமைகளையும் எதிர்நோக்குகிறார்கள். பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் மீது யாரும் தமது அதிகாரத்தின் பிடியை இறுக்குவதை விரும்பவில்லை.

சர்வதேச உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள், அரசு, பல்வேறு அரசியல் கட்சிகள், ஆன்மீக நிறுவனங்களின், பல சமூகங்களைச் சேர்ந்தவர்களின் சுதந்திரமான இசைவுபட்ட செயற்பாடுகளையே விரும்புகிறார்கள். சேதமடைந்த பாடசாலைகள் திருத்தபடவேண்டும் என்பதும், தமது பிள்ளைகள் சீக்கிரம் பாடசாலை செல்ல வேண்டும் என்பதும் நிரந்தரமான வசிப்பிடத்திற்கு சென்று விட்டால் தமது தொழிலை மீண்டும் ஆரம்பிக்கவேண்டும் என்பதும் மக்களின் கவலையாகும்.

ஆனால் ஜொயின்ற் மெக்கானிசத்தில் வடக்கு கிழக்கில் 5 பிரதிநிதித்துவத்தை தமதாக்கிக் கொண்டு, முஸ்லிம்களுக்கும் சிங்களவர்களுக்கும் பெயரளவில் ஒன்றிரண்டை ஒப்புக்கொண்டு விட்டு, தமிழர்களின் மாற்று தரப்பினரைப் புறக்கணித்து விட்டு இந்த பெருங்கவலை கொண்டுள்ள மக்கள்மீது தமது நிகழ்ச்சி நிரலைத்திணிப்பதே புலிகளின் நிலைப்பாடாகும் என்பதை புலிகளை விளங்கிக் கொண்டவர்கள் ஐயம் திரிபுறப் புரிந்து கொள்வார்கள். கிழக்கு பல்லினப் பாங்குடைய பிரதேசம். அது ஒரு வண்ணங்களின் கலவை.

2004 இல் புலிகளிடையே ஏற்பட்ட பிளவின் பின்னரும் பிரபா அணிசார்பு புலிகள் மீது ஆழமான வெறுப்பு மக்கள் மத்தியில் வேரூன்றி விட்டது. கையாலாகாத ரி.என்.ஏ றோபோக்களை மக்கள் இழிந்த பிறவிகளாகவே கருதுகிறார்கள்.

வடக்கு முஸ்லீம்களை உடுத்ததுணியுடன் வெளியேற்றியவர்கள், கிழக்கின ஜனநாயகக் குரலை நசுக்கியவர்கள், அந்த ஜனநாயக குரல்கள் ஒலித்ததாலேயே கொலை அரங்கை திறந்துள்ளவர்கள் கையில் தலைவிதியை ஒப்படைத்தால் அது குரங்கின் கையில் பூமாலையாகவே போகும்.

கடலில் இருந்து 100 மீற்றர் அப்பால் குடிமனைகளை அமைக்கவேண்டும் என்ற அரசின் நிலைப்பாட்டை எதிர்த்து குரல் எழுப்புபவர்கள் இந்த பாதுகாப்பு எல்லை பிரதேசம் பற்றி சம்பந்தபட்ட மக்களிடம் கலந்துரையாடப்படவேண்டும் என்று வலியுறுத்துபவர்கள் சுனாமி ஜொயின்ற் மெக்கானிசம் தொடர்பாக சம்பந்தப்பட்ட மக்களிடம் பேசப்படவேண்டும் என்பதை ஏன் மறுக்கிறார்கள்.

வடக்கு கிழக்கில் ஜொயின்ற் மெக்கானிசம் விடயத்தில் மக்களின் அபிலாசைகளே முதன்மையானவை. இதனை கருத்திற்கெடுக்காமல் செயற்படுவது சுனாமி அகதி முகாம்களில் பிள்ளைகளை பிடிப்பதற்கும், புலிகளின் சட்டம் ஒழுங்கு நீதித்துறை என்ற பெயரில் மக்களமீது தமது அதிகாரத்தை திணிப்பதற்கும், தற்போது உணவு முத்திரை உட்பட பல நிவாரணப்பொருட்களை பிடுங்கி எடுப்பவர்கள் சட்டபூர்வமாக அவற்றை பிடுங்கி எடுப்பதற்கும் வழிசமைப்பதாகவே அது அமையும்.

வடக்கு கிழக்கில் பன்முகத்தன்மையுடைய மனித முகம் கொண்ட கட்டமைப்பே சாத்தியமாகும்.

# மேதின அறை..................

1ம் பக்கத் தொடர்ச்சி

இடையறாத போராடடங்களின் ஊடாகத்தான் காலனிகளின் சுதந்திரமும் தொழிலாளி வர்க்கம் தற்போது அனுபவிக்கும் குறைந்தபட்ச உரிமைகளும் பெறப்பட்டன.

இலங்கையில் 1920 களின் பிற்பகுதிகளிலும், 1930 களின் முற்பகுதிகளிலும் தொழிலாளி வர்க்கம் கருக்கொண்டது. இன மத பேதங்களை கடந்த தொழிலாளர் ஒற்றுமை என்பதை அது வலியுறுத்தி நின்றது.

1940களில், 1950களில் தேசியங்களில் தனித்துவத்தின் அடிப்படையில் இலங்கையின் மக்களை ஒன்றிணைப்பதை அது வலியுறுத்தி நின்றது, இனவாதத்துக்கெதிராக போராடியது மலையகத்திலும் இலங்கையின் இரயில்வே துறைமுகங்களிலும் பஞ்சாலைகளிலும் பலம்கொண்ட தொழிற்சங்க பின்புலத்தை இடதுசாரி இயக்கம் கொண்டிருந்தது.

காலனி ஆதிக்கம் இலங்கையின் தென்பகுதியிலும், வடக்கிலும் தனது நிர்வாகத் தேவைகளுக்கான ஆட்களை இலங்கையின் உயர் குலத்திலிருந்து தெரிவு செய்தது.

எனவே மேல்வர்க்க அபிலாசைகளையே முழு சமூகத்தினதும் அபிலாசைகளாக முன்கொண்டு செல்லப்பட்டன, பெருவாரியான கிராமப்புறத்து மக்கள் முகமற்றவர்களாக இருந்தார்கள், இதில் சிங்கள கிராம மக்களின் அதிருப்திகளை பயன்படுத்தி, தேசிய வாழ்வில் அவர்களுக்கு இடமின்மையை பயன்படுத்தி இனவாதம் விதைக்கப்பட்டது.

மலையக தொழிலாளி வர்க்கம் இடதுசாரிகளுக்கு ஆதரவாக இருந்தபடியால் அவர்களின் வாக்குரிமையை, பிரஜா உரிமையை இலங்கையின் சுதந்திரத்தின் பின், பதவிக்கு வந்த ஆட்சியாளர்கள் பறித்தெடுத்தார்கள், காலனி ஆதிக்கத்தால் உருவாக்கப்பட்ட சேதங்களின் கதிர்வீச்சு அனர்த்தங்கள் எமது நாட்டில் பாரதூரமான தாக்கங்களை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது.

கடந்த 20வருட யுத்தமும் 1970களின் முற்பகுதியில், 80களின் பிற்பகுதிகளில் தென் இலங்கையில் உருவாகிய கிளர்ச்சிகளும் இந்தப் பின்புலத்திலேயே பார்க்கப்படவேண்டும். சுனாமி அனர்த்தம் போன்ற பாரிய நெருக்கடிகளை எதிர்கொள்வ தில் நாம் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினைகளிலும் காலனி ஆதிக்கக் காரர்களால் இந்த நாட்டில் விட்டுச் செல்லப்பட்ட அதிகாரத்துவ பாணியிலேயான நிர்வாக கட்டமைப்பே காரணமென்றால் அது மிகையல்ல.

தொழிலாளர்கள் சிக்காக்கோ ஆர்ப்பாட்டம் மூலம் சாதித்ததைப்போன்று 1910களின் பிற்பகுதிகளில் பெண்களின் சுதந்திரம் தொடர்பான இயக்கமும் வலுப்பெற்றது மார்ச் 8 சர்வதேச பெண்கள் தினமாக பிரகடனம் செய்யப்பட்டது. இதேபோன்று ஐ.நா சபையினால் சர்வதேச மனித உரிமைகள் தினம், சர்வதேச சிறுவர் உரிமைகள் தினம் என பன்முகத்தன்மை வாய்ந்த உரிமைப்பிரகடனங்கள் தவிர தேசங்களின் உரிமைகள் தொடர்பாக கலாச்சாரப் பண்பாட்டு பாதுகாப்புகள் தொடர்பாக, சுற்றாடல், சுகாதாரம், வீட்டுரிமை பிரச்சனைகள் தொடர்பாக, நீர் வளங்களை பாதுகாப்பது தொடர்பாக இன்னும் பல விடயங்கள் தொடர்பில் ஆவணங்கள் ஐ.நாவில் உருவாக்கப்பட்டன.

ஆனால் இலங்கையில் சர்வதேச மாற்றங்களிலிருந்தும், உள்ளார்ந்த ஆற்றலில் இருந்தும் சில சில முன்னேற்றங்கள் இருந்தாலும் மிக முக்கியமான பாரிய பிரச்சனைகள் தீர்க்கப்படல் வேண்டும். இன முரண்பாட்டு யுத்தம் அறுபதாயிரம் மக்களை காவுகொண்டுவிட்டது. இயற்கை அனர்த்தம் நாற்பதாயிரம் உயிர்களை காவுகொண்டுவிட்டது. தமிழ் பாசிசம் ஒரு விஷ விருட்சமாக வளர்ந்து இன்று தமிழ் சமூகத்தின் சகல சிறந்த அம்சம்களையும் துவம்சம் செய்துள்ளது.

சர்வதேச தரநிலைகளில் உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜனநாயகம் மனித உரிமைகள் வடக்குக் கிழக்கில் காணாமல் போன விடயங்களாகிவிட்டன புதிய தலைமுறைக்கு சுதந்திரமென்பது என்னவென்று தெரியாத சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டு விட்டது. தேடல்களும், மனித ஆர்வங்களும் சர்வநாசம் செய்யப்பட்டுவிட்டன. சிதறடிக்கப்பட்டு விட்டன. இனங்கள் பல்வேறு சமூகங்களுக்கிடையே பெரும் பிளவுகள் ஏற்படுத்தப்பட்டுவிட்டன. இந் நிலை ஆழிப் பேரலை அனர்த்தங்களை விட மோசமானவை.

புதிய ஒழுங்கொன்றை நோக்கி இலங்கை தனது பயணத்தை ஆரம்பிக்கவேண்டும், அதனை இப்போதே ஆரம்பிக்கப்பட வேண்டும். இலங்கை மக்களின் முகங்களில் மலர்ச்சியும் நம்பிக்கையும் மன வலிமையும் ஏற்படுத்துவதற்காக பீனிக்ஸ்போன்று உயிர்த்தெழ வேண்டிய வரலாற்றுச் சந்தில் நாம் நின்றுகொண்டிருக்கிறோம், இலங்கையின் தமிழ் சிங்கள முஸ்லிம் மக்கள் மத்தியிலுள்ள தொழிலாளர்கள், விவசாயிகள், கல்விமான்கள், தொழில்நுட்ப வல்லுனர்கள், மாணவர்கள் அனைவரும் அறிவுபூர்வமாக சிந்தித்து சுபிட்சமான இலங்கை ஒன்றை நோக்கிய பயணத்தை ஆரம்பிக்கவேண்டிய சவாலை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

படுகொலைகளற்ற, சிறுவர் சிறுமியர் சிரித்து மகிழும் அமைதிபூத்துக் குலுங்கும் ஒரு புதிய நாடு எமக்கு வேண்டும். தென்னாசியா அளவில் நாம் மக்கள் ஒன்றிணைந்து செயல் படுவதற்கான முழு மூச்சான முயற்சிகள் வேண்டும். சீனாவும், இந்தியாவும், பாகிஸ்த்தானும் உறவுகளில் புதிய அத்தியாயங்களை ஆரம்பித்துள்ளன.

எமது குறுகிய மன பௌதீக இடைவெளிகளை தகர்தெறிந்து கிணற்றுத் தவளை சிந்தனைகளிலிருந்து விடுபட்டு, தேங்கியழுகி நாற்றம் வீசும் குட்டை அல்லது ஏரியின் நிலையிலிருந்து விடுபட்டு சலசலத்து ஓடும் பிரவாகமாக மாறுவோம், நிமிர்ந்து நிற்போம் விரிந்த உலகத்தை தரிசிப்போம் கண்ணுக்கு முன்னால் தெரியும் துன்பமும் அவலமும் நிறைந்த யதார்த்தத்தை மாற்றுவோம். புதிய ஒழுங்கொன்றை ஏற்படுத்தி எம்மை அர்ப்பணிப்போம்.

## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

**அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் கண்ணோட்டம் வரவேற்கிறது.**

**அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:-**


**E.P.I.C., Box No: 95**
**95144 Garges Les,**
**Gonnesse Cedex,**
**France.**

**E.P.I.C., Box No: 0362**
**71603 Ludwigsburg,**
**Germany.**

**B.M. Box No: 1738**
**London - Wcix - 3nn,**
**U.k.**

**P - Fach No: 506**
**Bern - 17,**
**Switzerland.**

**P - Box No: 7183**
**Arumpakkam,**
**Chennai - 106,**
**India.**

**310 ஆஸ்பத்திரி வீதி**
**யாழ்ப்பாணம்.**
☎ 021 222 2022,

**29 ஏ, வாவிக்கரை வீதி**
**மட்டக்களப்பு.**
☎ 065 22 25179

**No: 159, கடல்முக வீதி**
**திருகோணமலை.**
☎ 026 22 27118

**141A, மன்னார் ரோட்**
**குருமன்காடு,**
**வவுனியா.**
☎ 024 22 23102

**சென்செபஸ்த்தியார் வீதி**
**மன்னார்.**
☎ 023 22 32822

# யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் இலங்கையில் ஒரு முன்னோடி ஸ்தாபனம்

ஏகாதிபத்தியத்திற்கு எதிரான இயக்கம் இலங்கையில் 1920களில் உருவாகியது.

தமிழர்கள் மத்தியில் யாழ்ப்பாண மாணவர் சங்கம் 1924 இல் உருவாகியது, பின்னர் இது யாழ்ப்பாண வாலிப சங்கம் என பெயரிடப்பட்டது. இந்த இளைஞர் இயக்கம் சமூக சீர்திருத்தங்களிலும் குறிப்பாக சாதி ரீதியான பாரபட்ச ஒடுக்கு முறைகளுக்கு எதிராகவும் ஈடுபாடு கொண்டிருந்தது.

தேசிய இலக்கியம், தேசிய மொழிகள் தமிழர்களுக்கு சிங்களமும், சிங்களவர்களுக்கு தமிழும் போதிக்கப்பட வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டிருந்தது. ஆரம்பத்திலேயே காந்திய பேரியக்கத்திலும், இந்திய தேசிய காங்கிரசிலும் இந்த வாலிபர் அமைப்பு ஈடுபாடு கொண்டிருந்தது. இந்த இயக்கம் சகல இனங்கள் அவர்களுடைய நலன்களை முன்னிறுத்தி நிகழ்த்தியது.

1920 களில் அரசியல் கட்சிகளை விட தனி நபர்களே ஆதிக்கம் செலுத்தினார்கள். இந்த இளைஞர் இயக்கம் சுயஆட்சி, சமூக கலாச்சார விடயங்கள், மொழி இலக்கியம், கலாச்சார விழாக்கள், உள்ளூர் தொழில்களின் மறுமலர்ச்சியை வலியுறுத்தி நின்றது. பல நூற்றாண்டுகளுக்கு ஊடாக ஐரோப்பியர்களின் ஆதிக்கத்தால் மறுக்கப்பட்டிருந்த நிராகரிக்கப்பட்டிருந்த இந்த விடயங்களுக்காக அது குரல் கொடுத்தது.

மறுபக்கம் காந்திய இயக்கத்தின் செல்வாக்கின்கீழ் மேற்கத்திய தாராளவாத விழுமியங்களையும் உள்வாங்கியிருந்தது. யாழ்ப்பாணத்தின் அரசியல் மற்றும் அறிவுசார் தளத்தில் தீர்மானகரமான சக்தியாக தேசியத்தையும், ஜனநாயகத்தையும் உயர்த்திபிடித்து ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் நிலபிரபுத்துவத்துக்கு எதிராகவும் இது எழுந்தது.

அரசியல், சாதி, கல்வி, தேசிய மொழிகள், கலாச்சாரம் தொடர்பாக அதன் காலகட்டத்தில் அது முன்னணியில் நின்றது. வேறு குறிப்பிடும் படியான இயக்கங்கள் இல்லாத காலகட்டத்தில் இது ஏகாதிபத்தியத்திற்கு எதிரான பிரதான இயக்கமாக இருந்தது. ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வை மக்கள் மத்தியில் வளர்த்தெடுப்பது அதன் பிரதான பணியாக அமைந்திருந்தது.

ஆரம்பத்தில் வடக்கு தமிழ் பகுதி காந்திய தேசிய இயக்கத்திற்கு முன்னுரிமை அளித்தது. அதற்கு சமாந்திரமாக தென்னிலங்கையில் வேறு இயக்கம் இருக்கவில்லை. இலங்கை சமசமாஜ கட்சி 1935லேயே உருவாகியது.

மகாத்மாகாந்தி 1927 இல் இந்த இளைஞர் காங்கிரசின் அழைப்பின் பேரில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார். அது இளைஞர் காங்கிரசிற்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகும். யாழ்ப்பாணத்தில் சகல மக்களுமே அவருக்கு மகத்தான வரவேற்பளித்தனர். காங்கிரசின் செல்வாக்கில் பூரண சுய இராச்சிய கொள்கை வலியுறுத்தப்பட்டது.

இவ் வாலிபர் அமைப்பு இலங்கை தழுவிய தேசியத்தில் உறுதியான நிலைப்பாட்டை கொண்டிருந்தது. இனவாதத்திற்கு எதிராக அது குரல் கொடுத்தது. இந்த விடயம் கீரிமலையில் 1928 இல் நடைபெற்ற வாலிபர் காங்கிரசின் நாலாவது அமர்வில் பிரகடனப்படுத்தப்பட்டது. எஸ். நடேசன் அவர்கள் இக் காலகட்டத்தில் பிரபல சட்டவல்லுனராகவும், செனட்டராகவும் இருந்தவர், தமது வரவேற்புரையில் அவர் இனவாத அடிப்படையிலான பிரதி நிதித்துவத்தை நிராகரித்தார்.

இந்த வாலிபர் காங்கிரஸ் தேசிய ஒருமைப்பாடு, இலங்கையர் எங்களை நாம் சொந்தமாக ஆட்சி செய்வது என்ற நிலைப்பாட்டை உறுதியாக கொண்டிருந்தது.


சாவகச்சேரி லங்கா அபிமானி அச்சகத்தில் இளைஞர் காங்கிரஸ் Ceylon Patriot வாராந்த பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டது.

1930 இல் செல்வாக்குமிக்க வாராந்த பத்திரிகை ஈழகேசரி வெளிவந்தது. இந்த பத்திரிகை சுன்னாகம் திருமகள் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. பொன்னையா என்பவரே இதனை வெளியிட்டார். இவர் இளைஞர் காங்கிரசின் தீவிர ஆதரவாளராக இருந்தார்.

இது இளைஞர் காங்கிரசின் கொள்கைகளுக்கு பரவலான விளம்பரத்தை தேடி கொடுத்தது. இந்தியாவில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் தொடர்பான தகவல்களையும் வெளியிட்டது. மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் பாடல்கள் யாழ்ப்பாணத்திலும் நாடெங்கிலும் ஈழ கேசரியினால் திருமகள் அச்சகத்தின் ஏனைய பிரசுரங்கள் ஊடாகவும் வெளிக்கொணரப்பட்டன.

1930 காந்திய உப்பு சத்தியாகிரகமும், அதன் விளைவாக பெரும் தொகையான இந்தியர்கள் சிறையில் அடைக்கப்படும் நிலைமைகளும் காணப்பட்டன. இந்த அகிம்சை போராட்டம் உலகத்தின் கவனத்தை ஈர்த்த தோடு யாழ்ப்பாண வாலிபர் சங்கத்தின் அங்கத்தவர்கள் மத்தியிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்த வாலிபர் சங்கத்தின் வருடாந்த மாநாடு 1931 இல் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் சில பெண்களும் பங்கு பற்றியிருந்தனர். இதன் ஆரம்ப அமர்வுகளில் பெண்களுக்குரிய ஸ்தானம் சரியான முறையில் வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியிருந்தது. இதன் பிரதம விருந்தினராக கமலாதேவி சட்டோபாத்தியாய இந்தியாவிலிருந்து வந்திருந்தார். இவர் தன்னை இந்திய தேசிய காங்கிரசின் தீவிர பிரிவின் எழுந்தவரும் தாரகையாக நிலைநாட்டியிருந்தார். இவரது வருகை இளைஞர் காங்கிரசை பெருமளவு ஆகர்சித்திருந்தது. இவரை வரவேற்று உரையாற்றிய கே. நேசையா அவர்கள்



இவர் தேசபக்தியினதும் சமூக மாற்றத்தினதும் உறுதியான சின்னம் என குறிப்பிட்டிருந்தார். அவர் அறிவுச் செழுமை மிகுந்தவராக காணப்பட்டார். அவர் தன துறையில் பொருளாதார பிரச்சினைகளையும் முதன்மைப்படுத்தினார். வழமையில் வாலிபர் சங்கத்தின் மாநாடுகளில் பிரதானமாக அரசியல் கலாச்சார விடயங்களில் ஏகாதிபத்திய ஆதிக்கத்தையும் தமிழ் சமூகத்தில் சமூக ஒடுக்கு முறைகளையுமே முன்னிறுத்தியிருந்தது. கமலாதேவி அவர்கள் முதல் தடவையாக முதலாளித்துவம், ஏகாதிபத்தியம், சுரண்டல் ஆகிய விடயங்களை உள்ளடக்கியிருந்தது. அவருடைய விரிவுரை ஏகாதிபத்தியத்திற்கு எதிராக சோசலிச உள்ளடக்கத்தை கொண்டிருந்தது.

ஏகாதிபத்திய எஜமானர்களுக்காக சொந்த மக்களின் நிலத்தை சூறையாடுபவர்கள் பற்றி அவர் எடுத்துரைத்தார். கடவுள் அரசனை காப்பாற்ற வேண்டும் என்ற பாடலின் கீழ் பிரித்தானிய சாம்ராச்ஜியத்தின் வெற்றிக் கொடியின் கீழ் மில்லியன் கணக்கான மக்களின் இரத்த மும் மரணமும் காணப்படுகிறது. இந்த பிரித்தானிய தேசம் வர்த்தகத்தில் மிகப்பிரமாதமாக வளர்ச்சி யடைந்துள்ளது. அவர்களுக்கு புதிய எமது நிலங்கள் கிடைத்துள்ளன.

நவீன நாகரீகத்தின் பெயரில் மிசனரிகளும்,நவீன கலாச்சாரத்தின் பெயரில் மத குருக்களும் எம்மை சுரண்டுகின்றனர். இதன் போக்கில் ஏகாதிபத்தியம் தன்னை நிலைநாட்டி தனது சட்டமும் ஒழுங்கும் என்பதை பிரயோகித்தது.

இந்த ஏகாதிபத்திய ஏஜென்டுகள் நமது தேசிய தொழிற்துறைகளையும் வர்த்தகத்தையும் அழித்து தமது அமைப்பை நிறுவினர். இந்நிலையில் எமது மக்கள் ஆதரவற்றவர்களாக வறுமையிலும், துன்பத்திலும் தள்ளப்பட்டார்கள். பொருளாதார அடிமைத்தனம் திட்டமிட்டதாகவும் எம்மை அழிப்பதாகவும் அமைந்திருக்கிறது. இந்த நோய்க்குரிய மருந்தை நாம் கண்டு பிடித்தாக வேண்டும்.

இந்த உரையில் கமலாதேவி அவர்கள் அதிகாரத்தை வெள்ளையர்களிடமிருந்து எமது நாட்டில் செல்வாக்குச் செலுத்தும் சிறுபான்மையினரிடம் கைமாற்றி விடமுடியாது என்பதையே குறிப்பிட்டார். நீதியான சமுதாயம் ஒவ்வொரு மனிதரினதும் முன்னேற்றத்தையும் அவனது குடும்பம் உழைப்புக்குத்தகுந்த பெறுமானத்தையும் வழங்குவதாக அமைய வேண்டும். அந்த அடிப்படையில் இலங்கை தொழிலாளர்கள் ஒழுங்குபடுத்தப் வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தியிருந்தார்.

# தென்னாபிரிக்கா விரும்பத்தகாத சகவாசம்



புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தென்னாபிரிக்காவிற்கு விஜயம் செய்து அங்கு தென்னாபிரிக்காவின் துணை ஜனாதிபதியையும் மனித உரிமைகளுக்கான நோபல் பரிசு பெற்றவரும் மிகப் பெரும் சுதந்திரப்போராட்டகாரருமான டெஸ்மன் டுடு அவர்களையும் சந்தித்தது தெரிந்ததே. தவிர தென்னாபிரிக்காவின் முக்கிய அரசியல் தலைவர்களையும் அவர்கள் சந்தித்து வருகிறார்கள்.

தென்னாபிரிக்க சுதந்திரப் போராட்டம் லட்சோப லட்சம் மக்கள் சார்ந்த நிறவெறி ஒடுக்குமுறைக்கெதிரான இயக்கமாகும். தென்னாபிரிகாவில் நிறவெறி ஆட்சி முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. இறுதியாக நீண்ட நெடி போராட்டத்தின் பலாபலனாக பேச்சுவார்த்தை, சமாதானம், சகவாழ்வு என்ற அந்த அடிப்படையிலேயே இன் காந்தா சமூகத்தினருடனும் வெள்ளையர்களுடனும் கூட உடன்பாட்டிற்கு வரமுடிந்தது.

தென்னாபிரிக்காவின் விடுதலைப்போராட்டத்தில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் பிரதான பாத்திரம் வகித்தது. மகாத்மாகாந்தி அவர்களின் நிறவெறிக் கெதிரான போராட்டம் தென்னாபிரிக்க சுதந்திரபோராட்டத்தில் வகித்த முன்னோடிப் பாத்திரத்தை யாரும் குறைத்து மதிப்பிட்டு விட முடியாது.

ஆபிரிக்க தேசிய காங்கிரசின் மூச்சாக இருந்தவர் வின்னி மண்டெலா. சில மனித உரிமை குற்றசாட்டுக்கள் தொடர்பில் இவர் கடந்த தசாப்தத்தின் முற்பகுதியில் குற்றம் சாட்டப்பட்டு ஆபிரிக்க தேசிய காங்கிரசில் அவரது செயலூக்கமான பங்களிப்பு விடுதலையடைந்த தென்னாபிரிக்காவில் குறைவடைந்தது.

ஆனால் மனித உரிமை மீறல்களையும் ஜனநாயகவிரோத செயற்பாடுகளையும் வாடிக்கையாகக் கொண்ட பாசிச புலிகளுடன் தென்னாபிரிகாவின் தற்போதைய ஆட்சியாளர்களும் சுதந்திரப்போராட்டக்காரர்களும் எவ்வாறு சகவாசம் வைத்துக் கொண்டார்கள் என்பது தான் ஆச்சரியமானது.

தென்னாபிரிக்காவின் விடுதலைப்போராட்டதிற்கும் இருண்ட கண்டத்தின் சுபிட்சத்திற்காகவும் ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்தின் வளாச்சிக்கும் இந்தியாவின் மறைந்த இந்திராகாந்தி அவர்கள் வழங்கிய பங்களிப்புக்கள் மகத்தானவை.

புலிகளால் படுகொலை செய்யப்பட்ட ராஜீவ் காந்தி அவர்களும் பாரிய பங்களிப்பைச் செய்திருந்தார். டெல்லியில் நெல்சன் மண்டெலாவிற்கு மகத்தான வரவேற்பளித்ததோடு புதுடில்லியில் ஒரு வீதிக்கு நெல்சன் மண்டெலா வீதி என்றும் பெயரிடப்பட்டுள்ளது.

இருந்தும் போதிய தகவல்கள் இன்மையோ தவறான தகவல் அளிப்போ பிழையான கண்ணோட்டங்களை ஏற்படுத்தி இருக்கிறதென்றே கருதவேண்டி இருக்கிறது.

# வேலிக்கு வைத்த முள் காலை குத்துகிறது

இந்த மண்ணில் சமாதானத்தை ஏற்படுத்த அரசாங்கமும் புலிகளும் எடுத்துவரும் முயற்சிகளை வெளியிலிருந்து சில தீய சக்திகள் குழப்புவதாக புலிகள் திரும்பத் திரும்ப கூறிவருகின்றனர்.

சமாதானத்தை சீர்குலைப்பவர்கள் புலிகளேயன்றி வேறெவருமில்லை. எதிர்ப்பு போராட்டம், ஆர்ப்பாட்டம் என்ற பேரில் புலிகளின் பின்னணியுடன் படைத்தரப்புக்கு எதிராக திட்டமிட்டு நடாத்தப்படும் கல்வீச்சுக்கள், காவலரண் எரிப்புக்களும் சமாதானத்தை சீர்குலைக்கும் நடவடிக்கைகளே. இவை மக்கள் விரும்பும் அமைதிக்கு, சமாதானத் தீர்வுக்கு குந்தகம் செய்வதுடன் இனப்பிரச்சினைத் தீர்வை பின்தள்ளவும் காரணமாகின்றன.

குறிப்பாக யாழ் மாவட்டத்தில் இடம்பெறும் விபத்துக்கள் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடாத்துவதற்கு சாட்டாக கொள்ளப்படுவது தவிர்க்கப்பட வேண்டும். இது போன்ற முன்யோசனையற்ற நடவடிக்கைகள் சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையாகி சமாதான முயற்சிகளை பின்தள்ளுவதுடன் அமைதியை குலைத்து யுத்தத்திற்கே இட்டுச் செல்லும் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் மட்டுமல்ல பொது மக்களும், ஊடகங்களும் மனங்கொள்ள வேண்டும்.

வாகன விபத்துக்களைத் தொடர்ந்து இடம்பெறுகின்ற அடாவடித்தனங்கள், அசம்பாவிதங்களுக்கு மக்கள் போராட்டம் என்று சாயம் பூசி பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்ட போதும் பொதுமக்கள் இது போன்ற அடாவடித்தனங்களில் ஈடுபடுவதில்லை இவற்றை விரும்புவதில்லை என்பதே உண்மை.

விபத்துக்களை தடுப்பதற்கு இவ்வித ஆர்ப்பாட்டங்கள் எள்ளளவும் உதவப் போவதில்லை இதற்குப் பதிலாக போக்குவரத்து விதிகள் தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்கு வன்னிப்பகுதியில் புலிகளின் காவல்துறையினர் நடாத்திவரும் வீதி ஒழுங்கு கருத்தூட்டும் கருத்தரங்குகள் கூடிய பலனைத் தரும்.

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள புதுக்குடியிருப்பில் வீதி ஒழுங்குகளை மதியாது, சமாந்தரமாக சைக்கிளில் பயணம் செய்யும் துவிச்சக்கர வண்டி பாவனையாளர்கள் 50 பேரிடமிருந்து புலிகள் தண்டப்பணம் அறவிட்டிருக்கும் செய்தியையும் அண்மையில் தமிழ் பத்திரிகைகளில் பார்க்க முடிந்தது.

விபத்துக்கள் தொடர்பாக புலிகளின் அணுகுமுறை தமது கட்டுப்பாட்டில் உள்ள வன்னியில் ஒன்றாகவும் படையினர் நிலைகொண்டுள்ள யாழ் குடாநாட்டில் வேறொன்றாகவும் இருப்பதை மேற்படி புலிகளின் நடவடிக்கைகள் எடுத்துக்காட்டுகின்றன.

இந்த ஆர்ப்பாட்டங்களில், அசம்பாவிதங்களில் தமக்குத் தொடர்பில்லை என புலிகள் மறுத்த போதும் புலிகளின் மறைமுகமான தலையீடே அசம்பாவிதங்களுக்கு காரணம் என்பது யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவுக்கும் யாழ் குடாநாட்டு மக்களிற்கும் நன்கு தெரியும்.



புலிகளுக்கு இந்த ஆர்ப்பாட்டங்களுடன் தொடர்பில்லையெனில் களேபரங்களை முடிவுக்கு கொண்டு வருவதற்காக படைத்தரப்பினருடன் மேற்கொள்ளப்படும் கலந்துரையாடல்களில் புலிகள் ஏன் கலந்துகொள்ள வேண்டும்? பொது அமைப்புக்கள் சார்பில் அவற்றின் தலைமைப்பொறுப்பில் உள்ளவர்கள் அல்லது ஆர்ப்பாட்டத்தில் முன்னின்றவர்கள் கலந்து கொண்டு தமது பிரச்சினைகள் குறித்து படைத்தரப்பினருடன் பேசித் தீர்வுகாண்பதற்குப் பதிலாக புலிகளின் பிரதேசப் பொறுப்பாளர்கள் இந்த பேச்சுக்களில் முதன்மைப் பிரதிநிதிகளாக கலந்து கொள்வது புலிகளின் 'எமக்கு சம்பந்தம் இல்லை' என்ற கூற்றை பொய்யாக்கிவிடுகிறது.

இராணுவ வாகனங்கள் சம்பந்தப்பட்ட விபத்துக்கள் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் வன்முறைகளுக்கு குடாநாட்டு தமிழ் பத்திரிகைகளில் பெருமளவு இடம் ஒதுக்கப்படுகிறது. ஆயினும் உள்ளதை உள்ளபடி எழுதுவதில் அவர்களுக்கு இருக்கும் இயலாமை அந்த செய்திகளில் வெளிப்படுகிறது. அதுமாத்திரமன்றி படையினரின் வாகனங்கள் சம்பந்தப்படாத விபத்துக்கள் பற்றியோ, அதனால் பாதிக்கப்படும் பொதுமக்கள் பற்றியோ இந்த பத்திரிகைகள் அக்கறை செலுத்துவதில்லை, சில சமயம் ஒரு செய்தியாகக் கூட அவை வெளிடாமல் இருட்டடிப்புச் செய்யப்பட்ட சம்பவங்களும் உண்டு.

இந்த ஆர்ப்பாட்டங்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவமளவு முக்கியத்துவத்தை வீதி விபத்துக்களை தடுக்கும் வகையில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த இந்த பத்திரிகைகளின் பக்கங்கள் பயன்படுமானால் குடாநாட்டு மக்கள் அதிக நன்மையடைவர்.

விபத்துக்கள் இடம்பெற்ற பின் நிலமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இராணுவத்தினருடனும், பொலிஸாருடனும் கலந்துரையாடினோம், சேதங்கள், பாதிப்புக்களை பார்வையிட்டோம் என்று விளம்பரம் தேடிக்கொள்ளும் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டவர்கள் முன்னரே இந்த விபத்துக்கள் இடம்பெறாது தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பொதுமக்களின் எதிர்பார்ப்பும் அதுவே.

இராணுவ வாகனங்கள் சம்பந்தப்பட்ட விபத்துக்களில் வீதி ஒழுங்கை மீறியவர்கள் யார் என்பதை ஆராய்ந்து குற்றவாளிகளை தண்டித்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈட்டை பெற்றுக்கொடுக்கும் சட்ட ரீதியான ஒழுங்கு முறை பின்பற்றப்படுவதில்லை. மாறாக விபத்தில் சம்பந்தப்பட்டது இராணுவத்தினரின் வாகனமாயின் அது சாரதியின் குற்றமாக கணிக்கப்பட்டு விடுகிறது. இராணுவ வாகனத்துடன் விபத்துக்குள்ளாகும் சிவிலியன்கள் வீதிப்போக்குவரத்து விதிகளின் படி நடந்துகொண்டனரா? என்பது ஆராயப்படாமலே தீவைப்புக்களும், கல்வீச்சுக்களும் ஆர்ப்பாட்டங்களும் ஆரம்பித்து விடுகின்றன.

விபத்தின் காரணமாக உயிரிழப்பு ஏற்படும் போது அல்லது படுகாயம் அடையும் போது அறிந்தவர்கள், தெரிந்தவர்கள், நண்பர்கள், உறவினர்கள் ஆத்திரப்படுவதும் ஆவேசமடைவதும் இயல்பானதே. எனவே, நடைபெறுகின்ற ஆர்ப்பாட்டங்கள் விபத்து தொடர்பான எதிர்ப்பாக இருந்தால் அதில் ஓரளவு நியாயம் இருக்கிறது. ஆனால் இந்த ஆர்ப்பாட்டங்கள் இராணுவக் காவலரண்களை துவம்சம் செய்து, இந்த விபத்துக்களுடன் சம்பந்தமில்லாத கட்சி அலுவலகங்களை அடித்து நொருக்குவதை இலக்காகக் கொண்டிருப்பது இந்த ஆர்ப்பாட்டங்களின் உள்நோக்கத்தையும், அம்பை ஏவிவிட்டவர்களையும் இனங்காட்டிவிடுகிறது. இயல்பான நியாயமான எதிர்ப்பையும் மதிப்பிழக்கச் செய்துவிடுகிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகைக்கு கலாநிதி ஒருவர் எழுதியுள்ள கடிதத்தில் ஒருநாள் துள்ளிக்குதித்து ரயர்களை எரித்து ஆர்ப்பாட்டம் செய்துவிட்டால் எமது வாழ்க்கை பாதுகாப்பாக அமைந்துவிடுமா? என்று எழுப்பியிருந்த கேள்வி பொதுமக்களின் வெப்பியாரத்தை வெளிக்காட்டுவதாகும்.

விபத்துக்களை சாட்டாக வைத்து அரச படைகளுடன் மோதலை தோற்றுவித்து காவலரண்களை தீக்கிரையாக்கி இராணுவத்தை வெளியேற்றிவிட முடியாது அத்துடன் இத்தகைய மோதல்கள் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட நோக்கங்களுக்கு விரோதமாக, யுத்த நிறுத்தம் சீர்குலைந்து போக வழிவகுத்து தமிழ் மக்களின் ஒட்டுமொத்த நலனிற்கும் தீங்கு விளைவிப்பதாக அமைந்துவிடக் கூடாது.

குடாநாட்டில் இடம்பெறும் விபத்துக்களை தடுப்பதற்கு அல்லது குறைப்பதற்கு வெறுமனே இராணுவத்தினரின் வாகனங்கள் மட்டுமன்றி யாழ் குடாநாட்டில் உபயோகிக்கப்படும் அத்தனை வாகனங்களும் போக்குவரத்து விதிகளுக்கு அமைய உபயோகிக்கப்பட வேண்டும். ஏனெனில் இலக்கத்தகடு இல்லாத மோட்டார் சைக்கிள்களை புலிகளே அதிகம் பயன்படுத்தி வருகின்றனர். அத்துடன் போக்குவரத்து நெரிசல் மிக்க இடங்களுக்கூடாக பயணம் செய்யும் சைக்கிள் பாவனையாளர்களும், பாதசாரிகளும் கூட போக்குவரத்து விதிகளை பின்பற்றி நடந்துகொள்வது விபத்துக்களை தவிர்ப்பதற்கு அவசியமாகும்.

விபத்து காரணமாக ஏற்பட்ட ஒரு உயிர்ப்பலியை கண்டித்து நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களால் மேலும் ஒரு அப்பாவி வயோதிபரின் உயிர் பறிக்கப்பட்டது யாராலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாகும். இதற்கு வெறுமனே படையினர் மீது மட்டும் பழியை போட்டு தப்பிவிடமுடியாது. நிலமை அந்தளவிற்கு மோசமடைவதற்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் காரணமாயிருந்த ஒவ்வொருவரும் இதற்கு பதில்சொல்லியாக வேண்டும்.

புலிகள், புலி சார்பு பொது அமைப்புக்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரதும் கடந்த கால தவறான வழிநடத்தலே 16.04.2005 அன்று இருபாலையில் மினிபஸ் தீக்கிரையாக்கப்பட்டதற்கு பிரதான காரணமாகும். விபத்தில் ஒருவர் கொல்லப்படுவது சாதாரணமான விடயமில்லை. அதனால் அவரது குடும்பத்திற்கு ஏற்படக்கூடிய இழப்புக்கள் ஈடுசெய்யப்படக் கூடியதுமில்லை ஆனால் விபத்துக்களை தொடர்ந்து விபத்தில் சம்பந்தமில்லாத மூன்றாவது தரப்பினரின் கண்மூடித்தனமான நடவடிக்கைகளால் விபத்தில் சம்பந்தப்பட்ட இருதரப்பினரும் மேலும் பாதிக்கப்படுவதுடன், பொது மக்களுக்கும் இன்னல்களை விளைவிப்பதாயுள்ளது.

விபத்து நடைபெற்ற இடத்திலிருந்து விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்களை அகற்றக் கூடாது என்று போராட்டம் நடாத்துகின்ற சமூகம் விபத்து நடைபெற்ற இடத்தில் நிறுத்தப்பட்டிருந்த வாகனத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லையேல் விபத்துக்களில் காயமடைபவர்களை பாதுகாப்பதும், விபத்து நடந்த இடத்தில் வாகனங்களை நிறுத்தி சட்டநடவடிக்கைகளை எடுப்பதும் இயலாததாகிவிடும்.

அண்மைகாலத்தில் யாழ் குடாநாட்டில் இழைக்கப்பட்ட அநீதிக்கு கண்டனம் தெரிவித்து நடாத்தப்பட்ட போராட்டங்களில் மிகவும் அமைதியாகவும், ஆனால் உறுதியாகவும் யாருடைய பலவந்தமும் இல்லாமலும் தமது சங்க அங்கத்தவர் ஒருவருக்கு இழைக்கப்பட்ட அநீதியை தட்டிக்கேட்க கூட்டாக சங்கம் ஒன்றினால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் இந்த மினிபஸ் உரிமையாளர்கள், ஊழியர்கள் நடாத்திய போராட்டம் என்றால் மிகையில்லை.

யாழ் குடாநாடு முழுவதும் மினிபஸ் சேவைகளை நிறுத்தி மினிபஸ் தீக்கிரையாக்கப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்த தினத்தில் வடமராட்சியில் வீதிக்கு குறுக்கே மரக்குற்றிகளை போட்டும், எரித்தும் பாதையை மறித்ததற்கும் தமது சங்கத்திற்கும் தொடர்பில்லை என வடமராட்சி மினிபஸ் சங்கதின் தலைவர் பத்திரிகை வாயிலாக தெரிவித்துள்ளார். எமது பிள்ளைகள் விபத்துக்குள்ளாகி படுமோசமான நிலையில் வைத்தியசாலையில் இருக்கும் போது எவ்வகையிலும் பிரயோசனம் இல்லாத வேலையை சில இளைஞர்கள் செய்துள்ளார்கள் என விபத்தில் சம்பந்தப்பட்டவர்களின் பெற்றோர் தெரிவித்துள்ளனர். இங்கே முன்னர் குறிப்பிட்டவாறு சாதாரண மக்கள் இத்தகைய அடாவடித்தனங்களை விரும்பவில்லை என்பதையே எடுத்துக்காட்டுகிறது.

இனிவரும் காலங்களிலாவது விபத்துக்கள் விபத்துக்களாக பார்க்கப்படுமா?





**சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இயன்றவரை உதவி**

# யார் இந்த ஆஞ்சநேயர்

டிசெம்பர் 13,1986 மறக்க முடியாத அந்தக் கறைபடிந்த நாட்களின் நினைவுகளை மீண்டும் ஒரு முறை மீட்டுப்பார்க்கவேண்டிய ஒரு நிலையில், மறக்க முடியாத பல உண்மைகளையும் பாசிசப் புலிகளின் கொடூரமான வரலாற்று நிகழ்வுகளை அம்பலப்படுத்தவேண்டியதன் அவசியத்தினாலும், மற்றும் இவர்களின் கொடூரமான பாசிச வரலாறுகளை வெளிச்சத்துக்கு கொண்டுவருவதனால் எமது நாட்டின் புதைந்து போன கசப்பான வரலாற்று உண்மைகளை யாவரும் அறிந்து கொள்ளமுடியும் என்ற ஆதங்கத்துடனும் இவற்றை வெளிக்கொணர விரும்புகின்றேன்.

அப்போது எனக்கு வயது 16 தான், அன்றைய காலகட்டத்தில் முன்னிலை வகித்த விடுதலை இயக்கங்கள் பற்றியோ அவர்களின் செயற்பாடுகள் பற்றியோ நன்கு அறிந்திருக்காது போனாலும், ஆயிரக்கணக்கான இளைஞர்கள் யுவதிகள் என சகலருமே ஏதாவதொரு வகையில் ஏதாவதொரு பங்களிப்புகளில் தங்களை இயக்கங்களில் இணைத்துக்கொண்டு செயல்ப்பட்டு வந்த நாட்கள்.

இது இந்தப் போராட்ட வரலாற்றின் மிக முக்கியத்துவம் வாய்ந்த காலகட்டம். இந்த காலகட்டத்தில் நானும் ஒரு போரட்டக் குழுவில் என்னை ஈடுபடுத்திக்கொள்வதில் மிக ஆவலாக இருந்ததுமட்டுமல்லாமல் ஒரு விடாப்பிடியான முறையில் வீட்டை விட்டு ஓடிவந்து ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கத்தில் இணைவதற்கான முயற்சியை மேற்கொண்டு அக்கட்சியின் யாழ் அலுவலகத்தில் தஞ்சம் புகுந்தேன்.

அப்போது, என்னை ஏற்றுக்கொள்ள மறுத்த அக்கட்சியின் யாழ்ப்பாணப் பொறுப்பாளர் என்னை வீட்டுக்குத் திரும்பி செல்லுமாறு வற்புறுத்தியும் அவற்றை நான் செவிசாய்க்காது மிகவும் விடாப்பிடியாக இருந்ததன் காரணமாக கடைசியில் அவர்களும் என்னை ஏற்றுக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது இதன் பின்னர் ஏற்பட்ட கசப்பான நிகழ்வுகளை அவர்களோ அல்லது நானோ சற்றும் எதிர் பார்க்கவில்லை.

அன்று மாலை 6.00 மணியளவில் சாவகச்சேரிக்கு புறப்பட ஆயத்தமாக இருந்த ஒரு வாகனத்தில், "என்னை சாவகச்சேரியிலுள்ள அவர்களது அலுவலகத்துக்கு கொண்டு சென்று விட்டுவிடும்படி அங்குள்ள ஒரு தோழரிடம் ஒப்படைத்தார்கள்". அங்கு எனக்கு அரசியல் வகுப்புகள் எடுக்கப்படும் என்றும் அதன்பின்னர் எனது விருப்பு வெறுப்புக்கள் பொறுத்து கட்சியின் எனது பங்களிப்புகள் பற்றி சிந்திக்கலாம் என்று எனக்கு சொல்லப்பட்டது.

எனது எதிர்கால விதியைப்பற்றியோ எனக்கு நிகழவிருக்கும் விளைவுகள் பற்றியோ எதுவுமே என் மனதில் தோன்றவில்லை, எனது சிந்தனைகளெல்லாம் நானும் ஒரு போராளி பட்டியலில் சேர்ந்விட்டேன் என்றும் என்னை எதிர் காலத்தின் ஒரு ஹீரோவாக நினைத்து என்மனதில் எதிர்காலம் பற்றிய கற்பனைகளில் மூழ்கிப்போயிருந்தேன்

இது அந்த நேரத்தில் அந்தக்காலகட்டத்தில் என்போன்ற வயதெல்லையைக் கொண்ட எல்லோரது நினைவுகளிலும் மனங்களிலும் தோன்றக்கூடிய ஒரு தவிர்க்க முடியாத மகிழ்ச்சியான விடயமாகத்தான் இருந்தது.

அன்று மாலை நான் வாகனமொன்றில் ஏற்றப்பட்டேன, வாகனத்தில் ஏறி எனது விரைவான பயணத்தைத் தொடங்கியதும் எனது கதாநாயகன் பாத்திரங்களைக் கொண்ட கற்பனைகள் பலமடங்காக படமாக ஓடியது. "சில மணித்தியாலங்களின் பின்னர் நான் சேரவேண்டிய இடத்தில் அந்தத் தோழரும் என்னைச் சேர்த்துவிட்டு சென்றுவிட்டார்."

இதன்பின்னர் எனக்கு நிகழவிருக்கும் அபாயங்கள் பற்றி எதுவும் அறியாதவனாக இருந்துவிட்டேன்.

**இன்று டிசெம்பர் 13,1986 இன்றுதான் நான் எனதுகைகளை இழந்துள்ளேன், இன்றுதான் பாசிசப் புலிகள் ஈ.பி.ஆல்.எல்.எவ் மீது தாக்குதலை மேற்கொண்ட நாள், இன்றுதான் புலி என்ற மிருகங்கள் பல எமது இயக்க உறுப்பினர்களின் உயிரைக் குடித்த நாள்.**

நான் அங்கு சென்ற சில நிமிடங்களில் எங்கோ தூரத்தில் கேட்ட வெடிச்சத்தம் என் மனதை எந்த விதத்திலும் பாதிக்கவில்லை, காரணம் நான் இயக்கத்துக்கு மட்டுமல்ல அந்த இடத்துக்கும் புதியவன் என்பதனால், "அது நம்மவர்களின் பயிற்சி முகாமாக இருக்கும்" என்ற ஒரு மகிழ்ச்சி பூர்வமான சிந்தனைகள் என் மனதில் தோன்றியது.

ஆனால் அந்த சத்தம்தான் நம் எல்லோரையும் இரையாக்கிக்கொள்ளப்போகின்றதற்கான ஆரம்ப அபாய ஒலியென்றோ! இதன் ஆரம்பந்தான் இந்தப்போராட்ட வரலாற்றின் முடிவுக்கான அறிகுறியென்றோ, நாம் எல்லாவற்றையும் இழந்து விடுவதற்கான ஒரு கொடூரம் நிகழ இருக்கின்றது என்ற உண்மையைக்கூட என்னால் அப்போது புரிந்து கொள்ள முடியவில்லை.



நாஜிகளின் சாவுத்தொழிற்சாலை

தொடர்ந்தும் சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்த நேரத்தில் எவருடைய முகங்களையும் நன்றாகப் பார்க்க முடியாத அந்த மங்கலான ஒளியில் கண்மூடித்திறப்பதற்குள் அந்த வெடிச் சத்தம் மிகவும் அண்மித்து விட்டதை உணர்ந்து அங்கு நின்ற சகதோழர்களின் செயல்ப்பாடுகளையும் கண்டுகொண்டபோது ஏதோ அசம்பாவிதம் நிகழ்கின்றதென்ற உண்மையை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது.

எதையும் சிந்திக்கவோ, கிரகித்துக்கொள்ளவோ, கேட்டறிந்து கொள்ளவோ நேரம் இருக்கவில்லை. எவருமே சற்றும் எதிர்த்திருக்க முடியாத சம்பவம், அந்த நிமிடத்தில் கூட எனக்கு உண்மையில் என்ன நடந்துகொண்டிருக்கின்றது என்பதை உணர முடியவில்லை நாம் நின்ற இடத்தை சுற்றிவளைத்த மிருகங்கள் எம்மவர்களின் உயிர்களைக்குடிக்க, எம்மை அழித்தொழிக்க வந்துள்ளார்களென்றோ அல்லது அந்த சகோதரப்படுகொலைகளை அவர்கள் செய்வார்களென்ற சிந்தனை கூட யார் மனதிலும் தோன்றவில்லை.

சில கணங்களுக்குள் நாலாபக்கமும் இருந்து வந்த துப்பாக்கி சன்னங்கள், எறிகுண்டுகள் பல தோழர்களின் உயிர்களைப் பலிகொண்டு பலரின் உடல்களையும் ஊனமாக்கியது மட்டுமல்லாமல் எதுவுமேயறியாத எனது கைகளையும் பதம்பார்த்துவிட்டது. தோள்மூட்டில் பலத்த காயங்களுக்குள்ளாகி விழுந்துகிடந்த என்னை எனது தொங்கிக்கொண்டிருந்த வலது கையைக்கூடப் பொருட்படுத்தாது அந்தக் காடையர்கள் இழுத்துச்சென்று தெருவில் போட்டார்கள்.

அந்தநேரத்தில் என்ன நடந்தது? யார் இதைச் செய்தார்கள்? ஏன் செய்தார்கள்? என்ற எந்த விதமான கேள்விகளுக்கும் விடை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை, காரணம் நான் எந்த விதமான விபரமும் தெரியாத ஒரு அப்பாவியென்பதை யாரும் அறியர்.

என் காயங்களின் வலி காரணமாக நான் மற்றவற்றை சிந்திக்க முடியாத நிலையில் மயக்கமடைந்துவிட்டேன். எனது இரு கைகளிலும் பெருகிய இரத்த வெள்ளத்தைக்கூட கட்டுப்படுத்துவதற்கு யாருமே உதவிசெய்வார் என்று நினைத்துக்கூடப் பார்க்க முடியாத நிலை, இந்நிலையில் மற்றவர்களுக்கு என்ன நடந்திருக்கும் என்று கூட எனக்குத் தெரியாது அதுமட்டுமன்றி அவர்களின் முகங்களைக்கூட நான் அங்கு நன்றாகப் பார்த்ததில்லை எனவேதான் அவர்கள் யார் இவர்கள் யார் என்றதைக் கூட அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை.

எனது வலதுகை தோள்மூட்டுப் பகுதியுடன் துண்டிக்கப்பட்ட நிலையிலும், உடல் முழுவதும் இரத்தம் தோய்ந்த நிலையிலும் நான்கண்ட காட்சிகள் மிகவும் கொடூரமானவை, நான் மட்டுமல்ல இந்த மனித சமதாயமே மிகவும் வெட்கித் தலை குனிய வேண்டிய காட்டுமிராண்டி, மற்றும் மிருகத்தனமான செயல், அதை என்னால் என்றுமே மறக்கமுடியவில்லையென்பது ஒருபுறம் ஆனால், இன்றைக்கும் இப்போதும் இந்த காட்டுமிராண்டித்தனத்துக்கும், கொடூரத்தனத்துக்கும், மிருகத்தனத்துக்கும் எமது நாட்டில் சில வரலாறு தெரியாத அரசியல் வாதிகளும், வராலாறு தெரிந்த அரசியல் வாதிகளும், தெரிந்தும் தெரியாமல் தங்கள் சுய நலங்களை மட்டும் கருத்தில் கொண்ட வெளிநாட்டு அனுசரணையாளர்களும், இந்தக் காட்டுமிராண்டித் தனத்தை வரவேற்று அவர்களுக்கு மேலும் உற்சாகமளிக்கும் தமிழ் ஊடகங்களும் இதைச் சற்று திரும்பிப் பார்ப்பார்களா? சிந்தித்துப் பார்ப்பார்களா? என்பதுதான் எமது இன்றைய கேள்வி.

சுற்றி வளைக்கப்பட்டு சிறைப்பிடிக்கப்பட்ட எமது மற்றய தோழர்களில் கடும் காயங்களுக்குள்ளான, தோழர்கள், அங்கங்களை இழந்த தோழர்கள் என பல்வேறுபட்ட அவஸ்த்தைகளுக்கு உள்ளானவர்களின் முகங்களை அந்த வீதியோரத்தின் மின்கம்பங்களின் வெளிச்சத்தில்தான் என்னால் அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது. அப்போதுதான் கைகள் பின் புறமாக கட்டப்பட்ட நிலையில் எல்லோரும் இழுத்துவரப்பட்டார்கள். காயங்களின் வேதனைகளாலும் மரண பீதியனாலும் எவர் முகத்திலும் எதிர்கால நம்பிக்கை மறைந்துபோயிருந்தது.

காயப்பட்ட அனைவருக்கும் இரத்தம் அதிகமாக பெருகியமையனால் அதைப் பார்த்துநின்ற மற்றய சகதோழர்கள் அவற்றை தாங்கள் அணிந்திருந்த சாரங்களை கிளித்து அவர்களுடைய காயங்களை சுற்றி கட்டினார்கள். இவற்றை அவதானித்துக்கொண்டிருந்த சமுத்திரன் என்ற ஒரு காட்டுமிராண்டிப் புலி உறுப்பினன் அவர்களைத் தகாத வார்த்தைகளால் திட்டினான். அதன் பிறகு எல்லோரது கைகளையும் கட்டிவிட்டு அங்கு நின்ற ஒரு எல்வ் வானில் எல்லோரையும் ஏறிக்கொள்ளும்படி சொன்னபோது கைகளை கட்டியபடியே வாகனத்தில் ஏற முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார்கள் எமது தோழர்கள், ஆனாலும் கூட எந்தவிதமான உதவிகளும் அவர்களுக்கு செய்ப்படாமல் லொறியின் உள்ளே ஒருவர் வெளியில் ஒருவர் நின்று விறகுகள் ஏற்றப்படுவதுபோல ஒவ்வொருவராக லொறியினுள்ளே தூக்கியெறியப்பட்டார்கள்.

இதைக் கவனித்துக்கொண்டிருந்த என் மனதில் மரண பயம்தான் ஏற்பட்டது, நாங்கள் யாரும் பிழைப்போமா? என்ற கேள்வி. இந்த மிருகங்களினால் நான் எப்படி வேட்டையாடப்பட்டிருக்கிறேன்?

என்னை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வார்கள் என்றும், நான் எனது நிலைபற்றி அவர்களுக்கு தெளிவுபடுத்திவிடலாம் என்ற எண்ணம் கூட அடுத்த சில நிமிடங்களில் நிகழ்ந்த சம்பவங்களினால் தோற்றுப் போய்விட்டது. அதாவது அவர்கள் என்னையும் இந்த லொறியில்தான் கொண்டு செல்லப் போகிறார்கள் என்பதை நான் சற்றும் எதிர் பார்க்கவில்லை, அது மட்டுமல்ல அவர்கள் அந்த லொறியில் மற்றவர்களை ஏற்றுவதற்கு கையாண்ட முறையை விட மிகவும் கேவலமான முறையில்தான் என்னை ஏற்றினார்கள் என்பதை என்னால் என்றைக்குமே மறக்கமுடியாத ஒரு கசப்பான நினைவாகவும் உள்ளது. இந்த உலகமே நம்பமுடியாத அளவுக்கு எனது இரு கால்களை ஒரு புலியும் கைகள் இருண்டையும் மற்றொரு புலியுமாக பிடித்துத் தூக்கி இருண்டு முறை அங்குமிங்குமாக ஆட்டிவிட்டு லொறியின் உள்ளே எறிந்துவிட்டார்கள்!

இறந்து விட்ட நாய்களைக்கூட அடக்கம் செய்யும் போது அதற்கென கொடுக்கவேண்டிய சில முறைகள், மரியாதைகளைக் கொடுத்து மிகவும் பக்குவமாக அடக்கம் செய்யும் எமது சமுதாயம் தங்களை நாகரீகமான மனிதர்களென அடையாளப்படுத்திக் காட்ட விரும்பும் இந்தச் சமுதாயம், மனிதர்களின் உயிர்களோடு விளையாடும் மிருகங்களை ஏன் இவர்களால் தட்டிக்கேட்க முடியவில்லை? ஏன் இந்த மிருகங்களுக்கு எதிராக ஊர்வலங்கள் நடத்தவில்லை? ஏன் இந்த மிருகங்களின் கொடூரச் செயல்களை தண்டிக்க முடியவில்லை?.

மாறாக இந்த மிருகங்களை தீனி போட்டு வளர்க்கும் சமுதாயம்தானே இன்று இங்கு உருவாகியுள்ளது, ஒரு வேளை மனித சுவடுகளே இல்லாமல் போய் மனித சமதாயமே அழிந்துபோய், மிருகங்கள் மட்டுந்தான் இனி வடகிழக்கில் வாழவேண்டும் என்று இந்த மனிதன் நினைக்கின்றானா?.

பரினாம வளர்ச்சியடைந்து வந்த மனிதன் தான் திரும்பவும் படிப்படியாக தனது ஆரம்ப நிலையை அடைந்து விட விரும்புகின்றானா? எமது பிரதேசத்தில் வாழும் நாகரீகமான மனிதர்ள் கூட இப்படித்தான் சிந்திக்கிறார்களா? படித்தவர்கள் புத்திஜீவிகள் யாவருமே இப்படித்தான் மாறிவிட்டார்களா? மனிதர்களாகிய நீங்கள் சற்றுச் சிந்தியுங்கள்.

நான் சொல்லவேண்டியவை பல உண்டு திருந்தவேண்டியவர்களும் பலர் உண்டு ஆனால் அவர்கள் திருந்துவார்களா? இதுகூட எம்மால் எதிர்வு கூற முடியாது, காரணம் ஒரே நிலைப்பாட்டில், ஒரே நோக்கத்தில், ஒரே மனபயத்தில், உயிர் வாழ நினைக்கும் எமது சமுதாயம் இவற்றை என்றைக்குமே ஏற்றுக்கொள்ளாது என்பது எனது அனுபவம்,

இனி தொடர்ந்தும் சம்பவத்துக்கு வருகின்றேன். லொறியில் ஏற்றப்பட்ட நான் மற்றும் சகதோழர்கள் அந்த லொறியின் உள்ளேகூட மிகவும் கடுமையாகத் தாக்கப்பட்டோம்.அந்த நிமிடத்தில் இருந்தே எனக்கிருந்த பாதி நம்பிக்கைகூட இல்லாமல் போயுள்ளது, அதாவது நான் பிழைத்துக்கொள்வேன் என்ற எந்த ஒரு நம்பிக்கையும் கடைசி நேரத்தில் எனக்கு இல்லாமல் போய் விட்டது.

நான் அகப்பட்டது அந்த மிருகங்களிடம்தான் என்பதை நன்கு உணர்ந்து கொண்டேன். இதுதானா போராட்ட வரலாறு? இதுதானா போராளிகளின் தர்மம்? இதை நினைத்தா நான் பெருமைப்பட்டேன், கற்பனை கொண்டேன்? என்பதெல்லாம் என் மனதில் ஓடிய குழப்பமான சிந்தனைகள். எனது எதிர்கால சிந்தனைகள் எல்லாம் மழுங்கடிக்கப்பட்டுள்ளது என்பதை விட நான் மிகவும் ஏமார்ந்து விட்டேன், எனது பெற்றோரை நான் ஏமாற்றி விட்டேன் என்ற வெறுப்பான உணர்வுகளை என் மனம் தாங்கிக்கொண்டிருந்தது.

புறொயிலர் கோழிகள்போல் மூடிய லொறியில் அடைக்கப்பட்டு இடம் வந்ததும் பின்கதவைத் திறந்துவிட்டார்கள் ஒவ்வொருத்தராக மறுபடியும் கீழே தூக்கி வீசப்பட்டோம். நாங்கள் வந்தடைந்தது மயானமா? என்ற பயத்தோடு எழுந்து நிமிர்ந்து பார்த்தபோது கண்முன்னே தோன்றியது மனிதர்கள் வடிவில் மேலும் பல ஆயுதம் தாங்கிய மிருகங்களே! என்பதனால் எங்கள் மனதில் எந்த ஒரு நம்பிக்கையும் உயிர் சம்பந்தமாகத் தோன்றவில்லை.

மரண பயம் எம்மை விட்டு அகலவில்லை ஒவ்வொருத்தராக விசாரணைக்கென்று வரிசையில் நிறுத்தப்பட்டார்கள். ஒவ்வொருத்தரின் விசாரணையின்போதும் என்னை யாரும் காப்பாற்றமாட்டார்களா? என்நிலை யாரும் கூறமாமாட்டார்களா? என்ற அவா என் மனதில் ஓர் ஏக்கமாக இருந்தது.

எனது வலது கையை இழந்த நிலையிலும் உடல் முழுவதும் இரத்தம் தோய்ந்த நிலையிலும் எனக்கு ஓர் உயிர் ஆசை அது என் வயதுக்கேற்ற ஆசைதான் என்பதை விட எந்த மனிதனுக்கும் எந்த ஒரு உயிர் இனத்துக்கும் தன் உயிர்மேலுள்ள பொதுவான ஆசைதான், இருந்தாலும் என் மனதில் நம்பிக்கை படிப்படியாக குறைந்துகொண்டேதான் போனது.

புலி ஆண்ணாக்கள் என்னைக் காப்பாற்றுவார்கள், என்னை மன்னிப்பார்கள் என்று நினைத்தேன், இது என் தவறல்ல எனது வயதைப் பொறுத்தவரையிலும் எமது சமூக கலாச்சார ஒழுங்கு முறைகளுக்கேற்ப நான் வளர்க்கப்பட்ட சமூக சிந்தனைகளுக்கேற்ப சிந்தித்தது என் தவறல்ல, ஆனால், எமது சமூக கலாச்சாரம் சம்பந்தமாக மட்டுமல்லாமல் பொதுவான மானிட சமுதாய விழுமியங்களுக்கு மாறாக, அவர்களின் விருப்பு வெறுப்புகளுக்கு ஒவ்வாத, மிருகங்களின் உணர்வுகளைக்கொண்ட மனித உருவங்களாகப் படைக்கப்பட்டவர்கள் இதைச் செய்வார்களா? செய்தார்களா? என்பது கூட இங்கு சிலரின் பொறுத்துக்கொள்ளவும் சகித்துக்கொள்ளவும் முடியாததுமான கேள்விகளாகள்கூட இருக்கலாம்.

அவர்கள் வேறு யாராக இருக்க முடியும்?, ஒன்று எமது தமிழ் ஊடகங்கள், மற்றையது புலிகளின் தயவால் தங்கள் பதவிதளை, இருப்புக்களைத் தக்கவைத்துக்கொள்ள நினைக்கும் பதவி வெறி, உயிர் ஆசை கொண்ட நாய்களாக இருக்கும் மற்றது அதே இனத்தைச் சேர்ந்த "ஒன்றியங்கள்" என தங்களுக்கு ஒரு புனை பெயரைப் பாவித்துக்கொண்டு மக்களை ஏமாற்ற நினைக்கும் மற்றொரு வகை மிருகங்களாக இருக்கும். இவர்களெல்லாம் வரலாற்றோடு சம்பந்தப்படாதவர்கள் வயிற்றை மட்டும் காப்பாற்ற நினைப்பவர்கள்.

இவற்றையெல்லாம் நாம் கண்டுகொள்ளத் தேவையில்லை, உண்மை வரலாற்றை உணர்ந்துகொள்ள வேண்டிய மனித்களுக்கும், ஏதோ ஒரு வகையில் இந்தவரலாற்றுடன்

தொடர்ச்சி 6ம் பக்கம்

# புலிகளிடம் பொதுக்கட்டமைப்பை தாரைவார்த்தால் நிலைமை என்னவாகும்

சுனாமி பாதிப்புக்களிலிருந்து மீள்வதற்கான நிவாரணப் பணிகள் மற்றும் மீள் கட்டமைப்பணிகளை மேற்கொள்வதற்கு புலிகளையும் இணைத்து அரசாங்கம் பொதுக்கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகிறது.

புலிகளும் புலிகள் சார்பாக பேசுவதை தவிர வெறெதுவும் செய்யாத கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களும், மக்கள் அமைப்புக்கள் என்ற பேரில் புலிகளால் திட்டமிட்டு உருவாக்கப்பட்டிருக்கும் ஒன்றியங்கள், பேரவைகளும் இந்த முயற்சியில் தீவிரமாய் ஈடுபட்டுள்ளன.

குறிப்பாக வடமாகாணத்தில் இவ்வாறு அழுத்தங்கொடுக்கும் முயற்சியாக ஊர்வலங்கள் நடாத்தப்படுவதுடன், வெளிநாட்டுத் தூதுவராயங்களுக்கும், கண்காணிப்புக் குழு, ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகளுக்கும் இந்த அமைப்புக்களின் பேரால், மகஜர்கள் அனுப்பப்பட்டு வருகின்றன.

சுனாமி அலை ஓய்ந்த மறுகணம் சுனாமியால் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு மனிதாபிமான உணர்வின் உந்துதலினால் பொதுமக்கள் வழங்க முன்வந்த உணவைக் கூட தமக்கூடாகவே வழங்க வேண்டும் என்று புலிகள் உத்தரவு பிறப்பித்தார்கள். பொது நிறுவனங்கள் வழங்கும் உதவிகள் தமக்கூடாகவே வழங்கப்பட வேண்டும் என்று கட்டாயப்படுத்தினார்கள்.

பிரதம மந்திரி உட்பட அரசாங்க அமைச்சர்கள் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து கலந்துரையாடுவதையோ அவர்களது தேவைகளை அறிந்து அவர்களுக்கு உதவிகளை வழங்கவோ புலிகள் அனுமதிக்கவில்லை. அதற்கு தடையாக இருந்தார்கள்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பொதுநிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் வழங்கும் உதவிகள் கூட தமக்கூடாக வழங்கப்பட வேண்டும் என்ற புலிகளின் கோரிக்கை பலருக்கும் விசனத்தை ஏற்படுத்தியது. இதனால் நிவாரண உதவிகளை திரும்ப எடுத்துச் சென்றவர்களும் உண்டு. புலிகளுடன் முரண்டுவது பாறையில் தலையை மோதுவதற்கு ஒப்பானது என்பதனை சகித்துக் கொண்டவர்களும் உண்டு.

புலிகளின் இத்தகைய கோரிக்கையும், போக்கும் பல்வேறு தரப்பினரதும் கண்டனத்திற்கும் உள்ளானது. இதனால் தமது தலையீட்டை வேறு விதமாக புலிகள் மேற்கொண்டார்கள். தமிழர் புனர்வாழ்வுக்கழகம் என்ற அரச சார்பற்ற நிறுவனத்தின் போரால் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியிருந்த அனைத்து நலன்புரி நிலையங்களிற்குள்ளும் உட்புகுந்தார்கள். இப்போது தமிழர் புனர்வாழ்வுக் கழகம் என்ற போர்வையில் புலிகள் அனைத்து நிவாரணப் பணிகளிலும், மீள்கட்டுமான நடவடிக்கைகளில் தமது பிடியை மேலும் மேலும் இறுக்கிக் கொண்டுள்ளார்கள்.

புலிகளின் சர்வதேச நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருந்த லோறன்ஸ் திலகர் இப்போது லோறன்ஸ் கிறிஸ்டி என்ற பேரில் அரச சார்பற்ற நிறுவனமாக வேடம் தரித்திருக்கும் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் பணிப்பாளர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டிருப்பது தமிழர் புனர்வாழ்வு கழகத்தின்



பூர்வீகத்தை விளங்கிக் கொள்ளப் போதுமானதாகும்.

பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படவில்லை என்பதால் வடக்கு கிழக்கு தமிழர் பிரதேசத்தில் நடைபெறுகின்ற சுனாமி அனர்த்த நிவாரணப்பணிகள், மீள் கட்டுமான நடவடிக்கைகளில் புலிகளுக்கு எவ்வித சம்பந்தமும் இல்லை என்று யாரும் நினைத்தால் அது சிறுபிள்ளைத்தனம். அரசாங்க அதிபரிலிருந்து பிரதேச செயலர்கள் கிராமசேவகர்கள் அனைவருமே புலிகளின் விருப்பத்துக்கு இணங்கவே பணியாற்ற முடியும். அவ்வாறுதான் பணியாற்றி வருகிறார்கள். அவ்வாறு புலிகளின் உத்தரவுகளுக்கு கீழ்ப்படிய மறுக்கும் அதிகாரிகள் அடைந்த துன்பம், நேர்ந்த கதி ஊறிந்த விடயம்.

சுனாமியால் பாதிக்கப்பட்டு படகுகளை இழந்தவர்களுக்கு புதிய படகுகள் வழங்கப்பட்டுள்ளன. அதேபோன்று சேதமடைந்த 350க்கும் மேற்பட்ட படகுகள் திருத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. புலிகளின் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் மீனவர்களுக்கு படகுகளை திருத்திக் கொடுக்கும் பணியை செய்து வருகிறது. ஆனால் படகுகள் கைவசம் இருக்கும் மீனவர்களை கூட தொழிலுக்கு செல்ல விடாமல் புலிகள் தடுத்துவருகின்றனர். மீனவர்கள் கடலுக்கு சென்று சுமுகநிலை தோன்றிவிட்டால் பொதுக் கட்டமைப்பு அவசியமற்றதொன்றாகிவிடும் என்பதே புலிகள் இவ்வாறு தடைபோடுவதற்கு பிரதான காரணம் என மீனவர்கள் குறிப்பிடுகின்றனர்.

படகு இல்லாத மீனவர்களின் பெயர் விபரங்களையும் படகை இழந்தவர்களின் பட்டியலில் பதிவுசெய்ய நடவடிக்கை எடுத்த புலிகள், இப்போது அவர்களுக்கு புதிய படகுகள் வழங்கப்பட்டால் அந்தப்படகுகளை பெற்று தம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் கூறியுள்ளனர். ஏற்கனவே சுனாமியின் பாதிப்புக்குள்ளான மீனவர்களை இந்த அறிவிப்பு மேலும் மன உளைச்சலுக்கு உள்ளாக்கியுள்ளது.

புலிகள் பொதுமக்கள் வழங்கிய சமைத்த உணவுப்பார்சல்களுக்கும், கூட்டுறவு சங்க வாகனங்களை பயன்படுத்தி பாதிக்கப்பட்ட மக்களை ஏற்றி இறக்கிய போக்குவரத்து செலவு என்றும் கணக்குப்போட்டு காசு பிடுங்கிய புலிகளை உள்ளடக்கி பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டால் நிலமை என்னாகும். எவ்வித அதிகாரமும் வழங்கப்படாமலே பொதுமக்களுக்கு கிடைக்க வேண்டிய நிதியை அபகரிக்கும் புலிகள் பொதுக்கட்டமைப்பை பயன்படுத்தி என்ன செய்வார்கள் என்பதே இதனை எதிர்ப்பவர்களின் கேள்வி? இவ்வாறு கிடைக்கும் நிதி அபிவிருத்திக்குப் பயன்படுவதற்குப் பதிலாக புலிகளின் இராணுவத் நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படாது என நம்புபவர்கள் யாராவது இருக்கிறார்களா?

பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்று அரசாங்கத்தை வலியுறுத்துகின்ற எந்த பொது அமைப்பும், தமிழ் பாராளுமன்ற பிரதிநிதிகளும் இன்றுவரை சுனாமி நிவாரண நடவடிக்கைகளில் புலிகளின் தலையீடுகள் பற்றி கண்டுகொள்வதில்லை. கேள்வி கேட்பதுமில்லை.

ஒரே கல்லில் இரண்டு மாங்காய் என்பது போல நிவாரணப்பணிகள், மீள்கட்டுமான நடவடிக்கைகளுக்கு குறுக்கே நின்று அரசாங்க அதிகாரிகள் அந்தப் பணிகளை செவ்வனே நிறைவேற்ற தடையாக இருப்பதுடன் அவர்களிடமிருந்து கணிசமானளவு பணத்தையும் பிடுங்கிக்கொள்ளும் புலிகள் வெளி உலகிற்கு நிவாரண மீள்கட்டுமான நடவடிக்கைகள் சரியாக மேற்கொள்ளப்படவில்லை. தமிழர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள், அரசாங்க நிவாரணங்கள் கிடைக்கவில்லை என அரசாங்கத்தின் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களை கூறிவருகிறார்கள்.

அரசாங்கம் தமிழ் மக்களுக்கு வழங்கும் உதவிகளை பயன்படுத்தி புலிகள் தமது அரசியல் வேலைத் திட்டத்திட்டங்களுக்கு வலுச்சேர்க்க விரும்புகிறார்கள்.

யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்வதற்கு உதவும்

தொடர்ச்சி 07ம் பக்கம்

## யார் இந்த......

05ம் பக்கத் தொடர்ச்சி

சம்பந்தப்பட்டு தங்கள் முகங்களையே மறந்து மறைந்து வாழும், தங்களை மறைத்து வாழும் உண்மையான உணர்வு கொண்ட முதுகெலும்புள்ளவர்களுக்கு மட்டும் நாம் இப்படிப்பல உண்மைகளை வெளிப்படுத்துகின்றோம்.

என்னை காப்பாற்றவேண்டும் என்ற நலைப்பாட்டிலோ இரக்க சுபாவத்திலோ இல்மல் வைத்தியசாலையில் சேர்க்கவேண்டிய ஒரு நிர்பந்தம் புலிகளுக்கு எண்ணால் ஏற்பட்டது இதனால் நான் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டேன். எனது கைகளை இழந்ததனால் என் உயிர் தப்பியது. பின்பு பெற்றோர்களிடம் நான் ஒப்படைக்கப்பட்டேன்.

ஆனால், நான் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்ட பின்னர் நிகழ்ந்த சம்பவங்களை தற்போது என்னுடன் இங்கு வந்திருக்கும் சக தோழர் மூலம் அறிந்துகொண்டேன். அவர்களே தொடர்ந்து நிகழந்த சம்பவங்களை இங்கே தொடர்கின்றார்கள்.

"இது மீசாலையில் உள்ள புலிகளின் பாசறை சித்திரவதை முகாம்" இந்த வதை முகாமில் உள்ள ஒரு "கோழிக் கூட்டுக்காக தயார் செய்யப்பட்ட" குடிசையில் கைகள் கட்டப்பட்ட நிலையில் சுமார் 75 பேர்வரை அடைக்கப்பட்டோம். அன்று இரவு முழுவதும் நாம் உணவுகள் வழங்கப்படாமலும் குடிக்கத் தண்ணீர் வழங்கப்படாத நிலையிலும் மிகவும் அவஸ்தைப் பட்டோம்.

"தண்ணீர் மட்டும் தந்தால் போதும்" என்று ஒருவர் ஒரு புலியிடம் கேட்ட போது தகாத வார்த்தைகளால் அவன் திட்டினான், எங்களுக்கு தண்ணீர் வேண்டாம் கைகளையாவது அவிட்டு விடுங்கள் என்று ஒரு தோழர் கேட்ட போது காலால் உதைத்து அந்நபரை காயப்படுத்தினான் அந்த "ரூபோட்டி" என்று புலிகளால் செல்லமாக அழைக்கப்படும் செல்லப்பிராணி காடையன்.

நாங்கள் பசியால் வாடினோம், தாகத்தினால் துவண்டோம் ஆனாலும் நித்திரைகொள்ள முடியும் என்றாலும் அந்த சுதந்திரம் கூட எமக்குக் கிடைக்கவில்லை, ஆயினும் அடி உதை இல்லாமல் இருந்தால் கூட பரவாயில்லை.

நடு இரவில் வந்த குழுவொன்று எம்மை கைகள் கட்டிய நிலையில் உருட்டி உருட்டி பதம் பார்த்து வன்னியில் இருந்து வந்த விக்டர் தலைமையிலான குழுவினரே இப்படி நாகரீகமாக நடந்துகொண்ட பெருமைக்குரியவர்கள், இதை வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்ற மற்றைய உள்ளுர் மிருகங்கள் அவர்களின் பெயரைச் சொல்லி பெருமைப்பட்டது.

இவர்களில் மனிதர்களே இல்லையா? என்று நாம் சிந்திக்க முடியாது, ஏனெனில் அதற்கான எந்தவொரு அறிகுறியுமே கிடையாது.

மறுநாள் காலை எமக்கு தேனீர் கொண்டு வந்தார்கள் நாம் அவர்களின் முகங்களை நன்றியோடும் புன்னகைத்த முகத்தோடும் நோக்கினோம் ஆனால் அவர்கள் எந்தவிதமான சந்தோசமும் முகத்தில் காட்டாதவர்களாக முறைத்தபடியேதான் இன்னமும் முகத்தை வைத்திருந்தார்கள்.

இவர்கள் எம்மைத் தாக்கியழிக்கத் தொடங்கியபோது எந்தவிதமான எதிர்ப்பும் நாங்கள் காட்டவில்லை, இருந்தும் இவர்கள் முகத்தில் ஏன் இந்தக் கொலை வெறி? பாதிக்கப்பட்டவர்கள் நாங்களே! ஆனால் நாங்கள் இவர்கள் போன்று இவர்களைப் பார்க்க முடியுமா? வெறுக்க முடியுமா? முகத்தை இப்படி வைத்திருக்க முடியுமா?

எங்களைக் காப்பாற்றிக்கொள்ள அவர்கள் செய்யும் அனைத்தையும் நாம் பொறுத்துக்கொண்டே ஆகவேண்டும் காரணம் எங்கள் உயிர் இப்போது அவர்கள் கையில் பூனை எலியுடன் விளைாடலாம் எலி விளைாட முடியுமா? ஆனால் புலியே மனிதர்களுடன் விளையாடும் போது என்ன செய்யமுடியும்?

எங்கள் அனைவரினதும் கைக்கட்டுகள் அகற்றப்பட்டன, எல்லோர் மனங்களிலும் எதிர்காலம் பற்றிய கேள்விக்குறியுடன் கூடிய ஒரு நம்பிக்கை, தேனீர் பரிமாறப்பட்டது ஆவலுடனும் சிலர் சந்தேகத்துடனும் அவற்றை வாங்கினார்கள். அப்போது அறிவித்தலொன்று "காலைக் கடன்களை முடித்துவிட்டு வரும் படி". இதைக்கூட அவர்கள் இப்படி நாகரீகமான முறையில் சொல்லவில்லை அதையும் புலிப்பாஷையில்தான் சொன்னார்கள். எல்லோரும் வந்து சேர்ந்த சில நிமிடநேரங்களின் பின்னர் காலை உணவு பரிமாறப்பட்டது. சந்தோஷப் பெருமூச்சு விட்டவர்களின் மனதில் மறுபடியும் சோகமான முகபாவம், காரணம் திரும்பவும் கைகளைக் கட்டிவிடும்படி கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

**இவர்களின் சித்திரவதைகள் முடிவு காண முடியாதவை எனவே சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிடுகின்றோம்.**

நாய்களை விடக் கேவலமான முறையில் நம்மவர்களை நடத்தியதில் முதன்மை வகித்தவர்தான் மகாலிங்கம் என சொந்தப் பெயரையும், அப்போது ஆஞ்சநேயர் என்றும், தற்போது இளம்பருதியென்றும் புலிகளால் அழைக்கப்படும் யாழ்ப்பாண புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர்.

**இங்கே இவர் புரிந்த சாகசங்களை உங்களுக்கு தருகின்றோம்**

ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர்கள் சிறைப்பிடிக்கப்பட்டிருந்த புலிகளின் வதை முகாமாக இருந்த மீசாலையில் அப்போது சித்திரவதைக்கு பொறுப்பாளராக இருந்தவர் இந்த ஆஞ்சநேயர்தான். "இது இவருக்கு மிகவும் பொருத்தமான பெயர்தான்" ஆனால் பெயருக்கேற்றார்போல் தனது முகபாவத்தையும் வைத்துக்கொண்டார், ஆனாலும் செயல்களிலாவது இவர்தான் மனிதன் என்று நிரூபித்திருக்கலாம் "ஆஞ்சநேயர் வடிவில் இன்னொரு மிருகம் உண்டு" அதற்குரிய செயல்பாடுகளையல்லவா அவர் செய்தார்.

இதுபோன்று சகல மிருக குணாம்சங்களையும் ஒருமித்தே ஒருங்கிணைத்து உருவாகியதுதான் புலி என்னும் இராட்சத மிருகம். எனவே அதன் குட்டிகளெல்லாம் வெவ்வேறு தோற்றங்களைக் கொண்டிருந்தாலும் மொத்தத்தில் இது ஒரு மிருகம்தான் என்பதனை யாவருமே புரிந்து கொண்ட உண்மை.

இந்த ஆஞ்சநேயர், யோசெப் என அழைக்கப்படும் சண்முகநாதன் சின்னவன் என்ற எமது தோழர் ஒருவரை தனது வதைமுகாமில் மிகவும் கொடுரமான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கினான் இரவில் நித்திரைசெய்து கொண்டிருக்கும் போதுகூட கால்கள் இரண்டிலும் பிடித்து இழுத்து படிகளால் கொண்டு வந்து முற்றத்தில் எறிந்துவிடுவான் இந்தப் பாவி, இது ஒரு நாள் இரு நாட்கள் நிகழும் சம்பவமல்ல ஒவ்வொரு இரவும் நிகழும் கிரமமான நிகழ்வு, இது இவனுக்கு வேடிக்கையாகவும் விளையாட்டாகவும் உள்ள ஒரு நாளாந்தப் பொழுது போக்கு நிகழ்ச்சி. இவற்றையெல்லாம் யாரால்தான் தட்டிக் கேட்க முடிந்தது அந்தத் தோழர் இவனுக்கு ஒரு வேடிக்கைப் பொருளாக மாறிவிட்டதைக் கண்டு நாமெல்லாம் மனதுக்குள் புளுங்கிக்கொண்டதைத் தவிர நம் எவராலும் எதுவுமே செய்யமுடியாத நிலையில் இருந்தோம்.

ஆனால் சுற்றிவர நின்று வேடிக்கை பார்க்கும் மற்றைய மிருகங்களுக்குக் கூட இது நாளாந்த திருவிழாவாகத் தான் இருந்தது. மனிதநேயமே அற்ற இந்த மிருகங்களின் செயல்களை எந்தவொரு மிருகமேனும் தடுத்து நிறுத்தவில்லை, ஆஞ்சனேயனின் நாளாந்த காவடியாட்டத்தால் தலையில் படுகாயமடைந்தா் அந்தத் தோழர். அவருக்கென்ன மருந்து மாத்திரை கிடைக்குமென்று எதிர்பார்க்கமுடியுமா?

மிருகங்களின் கையில் ஒரு மனிதன் அகப்பட்டால் அந்த மனிதனின் பாஷைகள் மிருகங்களுக்கு விளங்குமா? அந்த நிலையில்த்தான் தோழர் யோசெப்பின் நிலையும், அடுத்து இந்த மிருகங்களிடம் யார் மாட்டுப்படப்போகின்றோமோ என்பதைத்தான் நாம் சிந்திக்கவேண்டியிருந்ததே தவிர யாரையும் காப்பாற்றக்கூடிய நிலையில் நாம் இருக்கவுமில்லை. இந்த நிலையில் இன்னுமொரு நாள் இந்த ஆஞ்சநேயன் என்னும் "இந்தக் காட்டுமிராண்டிகளின் தலைவன்",மன்னன் என்ற பெயருடைய எமது இன்னொரு தோழர் நடு இரவில் உறங்கிக்கொண்டிருந்த போது அவர் அணிந்திருந்த சாரத்தை கழற்றி எறிந்துவிட்டு அவரின் ஆணுடம்பில் சுடுதண்ணீரை ஊற்றியுள்ளான், அந்த நேரத்தில் அவர் எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டார் என்பதை அவற்றை நேரில் கண்ட எம்மால்தான் உணரமுடிந்தது, இதை நினைத்து உங்கள் யாருக்காவது வெட்கமாக இருக்கிறதா? வேதனையாக இருக்குதா? கூச்சமாக இருக்கிறதா? அப்படியிருந்தால் நீங்களும் மனிதர்கள் என்பதை நாம் நம்பலாமா?

ஆனால் எமது பத்திரிகையாளர்களிடமும் மற்றும் "தமது தோழர்கள் இப்படிச் சித்திரவதைகளை அனுபவித்தார்களே! அவற்றை யார் செய்தார்களோ அவர்களுடனேயே கூட்டுச்சேர்ந்து துதிபாடும். காட்டிக் கொடுக்கும் சுரேஸ் அண்ணை அவர்கள், மற்றும் தங்கள் சகாக்களை ரயர்களை தோழில் சுமத்தி கழுத்தில் தொங்க விட்டபடி உயிருடன் எரியூட்டியது சரிதான் என்ற மனப்பாங்கில் மிருகங்களுடன் சேர்ந்து காட்டுமிராண்டிகளாக தம்மை இனம் காட்டிக்கொள்ளும் மற்றும் ரி.என்.ஏ காரர்கள் இதை நினைத்து ஒரு போதும் வெட்கப்படமாட்டார்கள்". நாம் அவற்றை என்றைக்குமே எதிர்பாக்க முடியாது, அவ்கள் தங்கள் நரம்புகளுக்கு எப்போதோ நிலையான விறைப்பு ஊசி போட்டு விட்டார்கள் தங்களை றோபோக்கள் போன்று மாற்றிவிட்டார்கள். ரிமோட் கன்றோலில் இயங்கும் அவர்கள் அதனைக் கட்டுப்படுத்துபவர் கைகளால்தான் கட்டுப்படுத்தமுடியுமே தவிர பாவம் அவர்கள் இனி மனித வாழ்க்கைக்குத் திரும்ப மாட்டார்கள்.

# பண்டட்ட கல்லூரி அதிபர் தொழில்நுட்ப பணிப்பாளர் கைலைநாதன்

தியாகராஜா கைலைநாதன் இவர் யாழ் குமாரசாமி வீதி, கந்தர்மடத்தைச் சேர்ந்தவர். இரு பிள்ளைகளின் தந்தை. மனைவியார் ஆசிரியை இவர் கொழும்பு தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபராக இருந்தவர். இவருடைய திறமையை அவதானித்த “புலிகளால் படுகொலை செய்யப்பட்ட முன்னாள் திருமலை பாராளுமன்ற உறுப்பினர் தங்கத்துரை அவர்கள் இவரை திருமலைக்கு அழைத்து திருமலை தொழில்நுட்பக் கல்லூரியை தொழிற்பட வைக்குமாறு கேட்டுக் கொண்டார்.

1996 காலப்பகுதியில் திருமலை தொழில்நுட்பக் கல்லூரி மூடப்படும் தறுவாயில் இருந்தது. அது சென்ஜோசப் கல்லூரி கட்டிடத்திலேயே இயங்கி வந்தது. அப்போது தொழில்நுட்பத் துறை விவகாரங்களுக்கு அமைச்சராக இருந்த மகிந்த ராஜபக்ஷவுடன் தொடர்பு கொண்டு திருமலை மிகிந்தபுரத்தில் புதிய தொழில்நுட்பக் கல்லூரியை தனிக்கட்டிடத்தில் நிறுவியதில் இவரின் பங்களிப்பு முக்கியமானது. இவர் மரணிக்கும்போது வயது 62. சேவை நீடிப்பு பெற்றிருந்தார்.

பின்னர் 1998இல் திரும்பவும் கொழும்பில் தொழில்நுட்ப கல்லூாயில் அதிபராக பணியாற்றினார். இந்துகலாச்சார தொழில்நுட்ப அமைச்சில் அவர் தொழில்நுட்ப பணிப்பாளராக அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டார்

அதிர்ந்து பேசாதவர் என்றும், சமூக உணர்வு உள்ளவர் என்றும் நற்பண்புகள் உள்ளவர் என்றும் தெரிந்தவர்கள் தெரிவிக்கிறார்கள். தனது மனசாட்சிக்கு சரியெனப்பட்டதை செய்பவர். யாருக்கும் அடிபணியாதவர் என அறியப்படுகிறது.

அரச ஊழியர்களை அச்சுறுத்துவதற்கும் தனது கடைகெட்ட பாமர சாம்ராச்சியத்தை நிறுவுவதற்கும் படித்தவர்கள், அரச அதிகாரிகள் தோதாக இல்லை என்பதே புலிகளின் பிரச்சனை யாகும். இதற்கு முன்னர் ஆரையம்பதியில் அரச அதிகாரி ஒருவர் சுனாமி நிவாரண உலர் உணவுப் பொருட்களை புலிகளிடம் வழங்காததற்காக அவர் அவமானப்படுத்தப்பட்டார். அவர்மீது ஊழல் குற்றச்சாட்டு ஏற்படும் விதமாக பிரதேச செயலக காரியாலய வளவினுள் காலாவதியான உணவு மருந்து பொருட்களைப் புதைத்தனர். இதனை எதிர்த்து அரச அதிகாரிகள் ஊழியர்கள் வீதியில் இறங்கி ஆர்பாட்டம் நடத்தியமையும் குறிப்பிடத்தக்கது. சகல அதிகாரிகள் ஊழியர்களை எச்சரிக்கவே இந்த தாக்குதல்.

# மெதுவாக அங்கொன்றும் இங்கொன்றுமாக மேற்கிளம்பும் மக்களின் எதிர்ப்பியக்கங்கள்

புலிகளின் சர்வாதிகாரமானதும், தான்தோன்றித்தனமானதுமான நடவடிக்கைகளை எதிர்த்து இதற்கு முன்னரும் சிற்சில சந்தர்ப்பங்களில் பாசிச அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் மக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். குருநகர் மீனவர்கள் தமது வள்ளங்கள் எரிக்கப்பட்டபோதும் மன்னார் பள்ளிமுனை மீனவர்கள் தமது வள்ளத்தின் மீது புலிகள் துப்பாக்கிபிபரயோகம் செய்த போதும், ஆரையம்பதி பிரதேச செயலாளர் புலிகளின் பின்னணியில் தாக்கப்பட்டபோதும்- அம்பாறையில் பிரதேச செயலாளர் கொல்லப்பட்டபோதும் ஊழியர்கள் அதிகாரிகள் வீதிக்கிறங்கினர்.

தமது பிள்ளைகளை புலிகள் பிடித்துச் செல்வதை எதிர்த்து பெற்றோர் ஆசிரியர் வாளைச்சேனைபோன்ற இடங்களில் எதிர்ப்பை காட்டினர். முஸ்லீம் மக்களும் சிங்கள மக்களும் பல்வேறு ஆட்கடத்தல் படுகொலைகள் தொடர்பாக மட்டக்களப்பு, அம்பாறை, திருமலை, மன்னார் போன்ற பகுதிகளில் எதிர்ப்பை காட்டியதையும் நாம் கவனிக்கத்தக்கது.

சுனாமி நிர்வாக கட்டமைப்பு கொடுக்கப்படும் பட்சத்தில் இத்தகைய மக்கள் இயக்கங்களை புலிகள் தமது முற்று முழுதான பாசிச அணுகுமுறை மூலம் அழிக்கலாம், ஏற்கனவே வடக்கு கிழகில் சுதந்திதரமான மக்கள் இயக்கங்கள் இருந்த இடம்தெரியாமல் அழிக்கப்பட்டு விட்டன.

# திருக்கோயில் படுகொலை

கடந்த ஏப்ரல் 15ல் அம்பாறை மாவட்டம் திருக்கோவிலில் படுகொலை செய்யப்பட்ட பிரதேச செயலாளரின் இறுதி அஞ்சலி நிகழ்ச்சிகளில் பெருந்தொகையான மக்கள் பங்குபற்றியிருந்தனர் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த அரச ஊழியர்கள் அதிகாரிகள் பெருமளவில் பங்குபற்றியிருந்தனர்.

இந்த படுகொலை, குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில், சுனாமி நிவாரணப்பணிகளில் ஈடுபட்டிருந்த சர்வதேச உள்ளூர் அரச சார்பற்ற நிவனங்களின் தொண்டர்கள் மத்தியிலும் பதட்டத்தை ஏற்படுத்தியிருந்தது.

புலிகளின் படுகொலை நடவடிககைகள் கணிசமான அளவு சுனாமி நிவாரணப் பணிகளை ஸ்தம்பிதம் அடையச் செய்துள்ளது. அவர்கள் சுனாமி நிவாரணப் பணிகளை சீர்குலைப்பது மாத்ததிரமல்லாமல் பாதிக்கப்படும் மக்களுக்கு வழங்கப்படும் உணவு முத்திரைகளில் கணிசமான தொகையையும் தம்மிடம் ஒப்படைக்குமாறு கோரி வருகிறார்கள். அம்பாறை மட்டக்களப்பில் பிரபா அணிசார் புலிகள் மிக வேகமாக மக்களால் நிராகாரிக்கப்பட்டு வருகிறார்கள்.

இதற்கிடையே அம்பாறை மட்டக்களப்பு முஸ்லிம் மக்கள மத்தியில் புலிகளின் ஆயுத அராஜக வன்முறைகளினால் கடும் பீதி நிலவுகிறது. இது இஸ்லாமியத் தீவிரவாதத்தின் கூறுகளைத் தோற்றுவிக்கலாம் எனவும் அஞ்சப்படுகிறது.

# யாழ் பல்கலைக்கழகத்தில் சிங்கள முஸ்லிம் மாணவர்கள்

யாழ் பல்பலைக்கழகத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்ட சிங்கள முஸ்லிம் மாணவர்கள் அங்கு கல்வி கற்க அஞ்சுகிறார்கள், தம்மை வேறு பல்கலைக் கழகங்களுக்கு மாற்றுமாறு அரசிடம் அவர்கள் கோரிக்கை விடுத்தார்கள்.

உண்மையில் யாழ் பல்கலைக்கழகத்தினுள் ஊடுருவியிருக்கும் ஜனநாயக வீரோத சகிப்புத்தன்மையற்ற, குறுகிய மனோபாவம் கொண்ட சக்திகள் யாழ் பல்கலைக்கழகத்தில் மனிதர்கள் விரோத ஆரோக்கிய மற்ற ஒரு சூழலை உருவாக்கியுள்ளனர்.

ஆனால் யாழ் மாணவர்கள் மேற்கு ஐரோப்பிய வட - அமெரிக்க பல்கலைக் கழகங்களிலும், இந்தியாவிலும், இலங்கையின் தென்பகுதிப் பல்கலைக் கழகங்களிலும், வெவ்வேறு சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களுடன் கல்விகற்கமுடிகிறது.

யாழ் தமிழர்கள் தமக்கு மத்தியில் பெரும் கோளாறு காணப்படுகின்றது. மனித நடத்தைகளுக்கு விரோதமான பிறழ்வுகள் ஆதிக்கம் பெற்று வருகின்றன, அந்த சக்கிகள் பற்றி இப்போதே விழிப்படையவேண்டும்.

தலிபான்களில் ஆட்சிக் காலத்தில் ஆப்கானிஸ்த்தானில் இருந்த படித்தவர்கள் தொழில் துறை நிபுணர்கள் என்றிருந்த ஒரு சிலரும் வெளியேறியிருந்தார்கள் அல்லது கொல்லப்பட்டார்கள் அப்போது ஆப்கானிஸ்த்தான் செல்வதை எவரும் அதிகமாக விரும்புவதுமில்லை இன்றும்கூட நிலைமை முற்று முழுதாக சீரடைந்ததென்றில்லை.

புலம் யெர்ந்த தமிழர்கள் மிக நீண்ட காலமாக பெரும் கற்பனைக் கோட்டைகளை தமது மனங்களில் கட்டியெழுப்பியிருந்தார்கள் அவர்களில் பலர் கடந்த மூன்று வருடங்களில் ஏ9 பாதையினூடாக பயணம் செய்தது அந்தக் கற்பனைக் கோட்டைகள் சரிந்து விழுந்திருக்கின்றன.

# யாழ்ப்பாண வைத்தியசாலை

யாழ்ப்பாண வைத்தியசாலைகளில் டாக்டர்களின் தொகை கணிசமான அளவு குறைந்துள்ளது, யாழ் போதனா வைத்தியசாலையில் பத்து வீதமான டாக்டர்களே கடமையாற்றுகிறார்கள். பொதுமக்களின் வரிப்பணத்தில்தான் டாக்டர்கள் கல்வி கற்கிறார்கள். இவர்கள் ஏன் இவ்வாறு வெளியேறுகிறார்கள் என்று கேள்வி எழுப்பப்படுகின்றது. உண்மையில் புலிகளின் ஆதிக்கம் யாழ் குடாநாட்டில் பரவி வருவதாலும் பகுத்தறிவுக்கும் ஜனநாயகத்துக்கும் முரணான செற்பாடுகள் அதிகரித்து வருவதாலும் அங்கு டாக்டர்கள் வெளியேறி வருகிறார்கள். இது சுகாதாரத் துறையில் மாத்திரமல்ல வேறு துறைகளிலும் அவதானிக்கப்பட்டதொன்று.

# வடக்குக் கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களில் 60 வீதமானோர் கிழக்கு முஸ்லீம்கள்.

வடக்கிலிருந்து புலிகளால் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் திரும்பவும் தமது சொந்த இடங்களுக்கு செல்வதற்கான நிலைமைகள் உருவாக்கப்படவுமில்லை. அதற்கு சாதகமான சமிக்சைகளை புலிகள் காட்டவுமில்லை.

கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் தனித்தரப்பாக சுனாமி நிவாரணக் கட்டமைப்பில் இடம்பெறுவதையும் புலிகள் நிராகரித்துள்ளனர்.

கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழ்கள் பிரபா அணிசார் புலிகளின் மேலாதிக்கத்தை இப்பணிகளில் அறவே விரும்பவில்லை. இந்த லட்சணத்தில் சுனாமி நிவாரணக் கட்டமைப்பு அரசு புலிகளின் ஏகபோகமாக அமைவது ஜனநாயக விரோதமாகும், மக்களின் அபிலாசைகளுக்கு விரோதமானதாகும்.

கடலில் இருந்து நூறு யார் தூரத்துக்கு அப்பால் மக்கள் குடியேற்றப்படுதல் தொடர்பான அரசின் தீமானத்தை பாதிக்கப்பட்ட மக்களை கலந்தாலோசிக்காமல் மேற்கொள்ளக்கூடாது என்று கூறும் ஜனநாயகவாதிகள், மனித உரிமை வாதிகள், சிவில் சமூகத்தினர், இந்த இணைந்த கட்டமைப்பையும் சம்பந்தப்பட்ட பகுதிகளின் மக்களுடன் கலந்தாலோசித்துத்தான் செய்யவேண்டுமென்று ஏன் வலியுறுத்துவதில்லை. இது மிகவும் முக்கியத்துவம் வாந்ததாகும்.

சொல்ஹெய்ம் போன்றவர்கள் தங்களுக்கு சுலபமான, சௌகரியமான விடயங்களக்கு அப்பால் உள்ளூர் யதாத்தங்களின் அடிப்படையில் செயற்படவும் பேசவும் முன்வர வேண்டும்.

# புலிகளிடம் பொதுக்கட்ட.....

வகையில் அரசாங்கமும், அரசசார்பற்ற நிறுவனங்களும் வழங்கிய உதவிகளை புலிகள் தமது கோரிக்கையை ஏற்று வன்னிக்கு இடம்பெயர்ந்து, பின்னர் மீளக்குடியமர்ந்தவர்களுக்கு வழங்குமாறு மறைமுகமாக வற்புறுத்தினார்கள். இதனை மறுக்க முடியாத உத்தியோகத்தர்கள் புலிகளின் உத்தரவிற்கிணங்கவே செயற்பட்டார்கள். இதே போன்றே இன்று சுனாமி அனர்த்த நிவாரணப்பணிகள், மீள்கட்டுமானப்பணிகளையும் பாதிக்கப்பட்ட மக்களின் நலனிலிருந்தன்றி தமது இயக்கத்தின் அரசியல் வேலைத்திட்டத்திற்கு ஏற்றவாறு பயன்படுத்த புலிகள் முனைந்துள்ளார்கள்.

சுனாமி நிவாரணப்பணிகளில் வடக்கு கிழக்கு தமிழ் முஸ்லிம் மக்கள் புறக்கணிக்கப்படக் கூடாது. வெளிநாடுகளில் இருந்து கிடைத்த உதவிகளில் தமிழ் மக்களது பங்கு சரிவர பகிரப்பட வேண்டும். அரசாங்கம் இதனை சரிவர நிறைவேற்றுகின்றதா என்பது கண்காணிக்கப்படவும் வேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்காது. ஆனால் இந்தப் பணிகள் அனைத்தையும் புலிகளின் கைகளில் ஒப்படைக்கலாமா என்பதே கேள்விக்குரியதாகவும் கருத்து வேறுபாடுகளுக்கு காரணமாயும் சர்ச்சைக்குரியதாயும் அமைகிறது.

இப்போது பொதுக் கட்டமைப்பை புலிகளிடம் வழங்கினால் அமைதிப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு நல்ல சூழ்நிலை ஏற்படும் என்பது இதற்கு ஆதரவான ஒரு சாராரின் வாதம்.

இதே போன்றுதான் யுத்தநிறுத்தத்தின் பின்னர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்தி புலிகள் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் உள்ள தமது குடும்பங்களுடன் ஒன்றிணைவதற்கும், அரசியல் வேலைகளை மேற்கொள்ளவும் இடமளிப்பது ஜனநாயகச் சூழலை ஏற்படுத்தி அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இடையே புரிந்துணர்வை உருவாக்கி சமாதானப் பேச்சுக்களுக்கு இனப்பிரச்சினை தீர்வுக்கு உதவியாக அமையும் என்று கருதப்பட்டது. ஆனால் நிகழ்ந்தது என்ன? இருந்த ஜனநாயகச் சூழலும் இல்லாமல் போனதுதான் மிச்சம்.

அரசியல் வேலைகளுக்காக வந்த புலிகள் மாற்றுக்கருத்துள்ளவர்களை. தமது அரசியலுடன் இணங்க மறுப்பவர்களை கொன்று குவித்து வருகிறார்கள். வரி என்ற பேரில் மக்கள் கசக்கிப் பிழியப்படுகிறார்கள். மக்களின் பேச்சுரிமை, எழுத்துரிமை, கூட்டம் கூடும் உரிமை என அனைத்து அடிப்படை ஜனநாயக உரிமைகளும் நிராகரிக்கப்பட்டுள்ளன. புலிகள் ஜனநாயகத்திற்கு விரோதமாக

06ம் பக்கத் தொடர்ச்சி

ஏகபிரதிநிதித்துவத்தை பகிரங்கமாக வலியுறுத்தி வருகிறார்கள். மனித உரிமை மீறல்கள் நாளுக்கு நாள் அதிகரித்தே வருகிறது.

படுகொலைகளை புரிந்த புலிகள் இப்போது ஆயுதந்தாங்கிய குழுக்களை அனுப்பித் தாக்குதல்களையும் நடாத்தி வருகிறார்கள் இவற்றை தடுக்க, இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண அனுசரணையாளர்களுக்கும், கண்காணிப்பாளர்களுக்கும் முடியவில்லை, புலிகள் சார்பான பொது அமைப்புகள், மனித நேய அமைப்புக்களாலும் முடியவில்லை.

இன்று வரை அப்பட்டமான யுத்த நிறுத்த மீறல்களை முடிவுக்கு கொண்டுவர முடியாதவர்கள். ஒரு சிறு மாற்றத்தை தன்னும் ஏற்படுத்த முடியாதவர்கள் பொதுக்கட்டமைப்பில் புலிகளையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று சிபார்சு செய்திருப்பது வேடிக்கையானதாகும்.

புரிந்துணர்வு ஒப்பந்தம், பொதுக்கட்டமைப்பு போனறவற்றைக் கொடுத்து புலிகளின் போக்கை மாற்றிவிட முடியுமா என்பதை புரிந்துகொள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்டதன் பின்னரான 3 வருட அனுபவமே போதுமானதாகும்.

புலிகள் இதய சுத்தியுடன் இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஊடாக தீர்வுகாணும் முயற்சியில் ஈடுபடாத வரை இதற்கான புற அழுத்தம் எதுவும் புலிகளுக்கு ஏற்படாத வரை எந்த சூப்பியை கொடுத்தும் புலிகளின் அழுகையை நிறுத்த முடியாது.

# ஈ.பி.ஆர்.எல்.எவ் பத்மநாபா

## 1- இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பாக

புலிகள் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை முழுமையாக தம்மிடம் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறார்கள் அதன் அடிப்படையிலேயே பேச்சுவார்த்தை மீண்டும் ஆரம்பிக்க முடியும் என்று தெரிவித்துள்ளார்கள். நிரந்தர தீர்வை நோக்கிய பேச்சுவார்த்தைகளுக்கு முன்னுரிமை கொடுக்க புலிகள் தயாராக இல்லை. இது சமாதான முயற்சிகள் தொடர்பான புலிகளின் ஜனநாயக விரோத நிலைப்பாட்டையே பிரதிபலிக்கிறது. புலிகள் தமது எதேச்சாதிகாரத்தை சட்டபூர்வமாக ஏற்படுத்த முனையும் முயற்சியாகவே இதனைக் கருத வேண்டியுள்ளது.

புலிகள் மக்கள்மீது அக்கறை கொண்டிருப்பது போல குர லெழுப்பும் விடயங்களான (1) இடம் பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியமர வேண்டும். (2) பொருளாதாரத் தடை மற்றும் மீன்பிடித் தடைகள் முற்றாக நீக்கப்பட வேண்டும். (3) விரிவாக்கப்பட்ட இராணுவ முகாம்கள் மீண்டும் சுருக்கப்பட வேண்டும். (4) இராணுவத் தடைகள் மற்றும் சோதனைச் சாவடி கள் முற்றாக நீக்கப்பட வேண்டும். (5) புனர் நிர்மாண நடவடிக்கை கள் முழுமையாக முன்னெடுக்கப்பட வேண்டும் போன்றவைகள் ஒரு முழுமையான அரசியற் தீர்வின் மூலமே சாத்தியமாகும்.

அதல்லாத வகையில் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் அனைத்தையும் வெறும் அரசியல் தந்திரங்களாகவே நோக்க வேண்டியுள்ளது. புலிகள் தமக்கு வசதிப்பட்டவைகளை மட்டும் அனுமதிப்பதுவும், அரசு வாக்குறுதிகளை மட்டும் வழங்கிக் கொண்டு காலத்தைக் கடத்துவதையுமே காண முடிகின்றது. மீண்டும் யுத்தம் நடைபெறாது என்ற உத்தரவாதம் இல்லாத நிலையில் மேற்கூறப்பட்டவை முழுமையாக நடைமுறையாவது சாத்தியமாகாது.

எனவேதான், **யுத்தத்தில் ஈடுபடுவோரும் சர்வதேச சமூக மும் இனிமேல் அரசபடைகளுக்கும் புலிகளுக்கும் இடை யில் எக்காரணம் கொண்டும் யுத்தம் ஏற்படவே மாட்டாது என்பதை உறுதி செய்தல் வேண்டும் என நாம் கோருகின் றோம். ஒருபுறம் சமாதானத்துக்காக முயற்சித்துக்கொண்டி ருப்பதாகக் கூறிக்கொண்டு மறுபுறம் மிகத்தீவிரமாக யுத்த த்துக்கான தயாரிப்புக்களில் ஈடுபட்டிருப்பதுவும் போலித்தன ங்களையே நிரூபிக்கின்றன. திட்டவட்டமான ஒரு அதிகாரப் பகிர்வை பற்றி இருதரப்பினரும் பேசாமல் விடுவதென்பது புலிகள் மீது மாத்திரமல்லாமல் அரசின் மீதும் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.**


புலிகளுடன் பேச்சுவார்த்தை நடைபெறும் அதேவேளை இன்னுமொரு பேச்சுவார்த்தைக் களம் உருவாக்கப்படவேண்டும். புலிகள் வராவிட்டாலும் அனைத்து தமிழ் கட்சிகள் மற்றும் சிங்கள முஸ்லீம் கட்சிகளை உள்ளடக்கியதாக பேச்சுவார்த்தை க்கான மன்றம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு ஆக்கபூர்வமாக அதிகாரப் பகிர்வு தொடர்பாகவும் இனப்பிரச்சினை தொடர்பான அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவேண்டும்.

அரசியல் அதிகாரம் பகிர்ந்தளிப்பது பற்றியும் அதனை நடைமுறைப்படுத்துதல் பற்றியும் இங்கு தெளிவான தீர்மானகர மான ஓர் அணுகுமுறை அவசியப்படுகிறது. **உடனடி நடவடிக் கையாக இலங்கையின் அரசியல் யாப்பின் 13வது திருத் தச்சட்டத்தின் கீழான அதிகாரங்கள் முழுமை பெற்றதான ஒரு கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டும்**.

கூட்டாட்சி அமைப்பு முறைப்படி இலங்கைக்கு ஓர் அரசியல் யாப்பை உருவாக்குவதற்கு சார்பாகவே கடந்த இரண்டு பொதுத் தேர்தல்களிலும் வடக்கு தெற்கு இருபகுதி மக்களும் வாக்களித் திருக்கிறார்கள். மாறிமாறி ஆட்சியை அமைக்கும் இரண்டு கட்சி களும் பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் உள்நாட்டு மக்கள் மத்தியிலும் வெளிநாட்டு அரங்கங்களிலும் பகிரங்கமாக இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வாக சமஷ்டி அமைப்பை ஏற்படுத்த தயாராக இருப்பதாக வாக்களித்திருக்கின்றன.

அரசியல் யாப்பு சீர்திருத்தம் என்பது ஒரே கட்டத்தில்தான் நடைபெற வேண்டும் என்ற எந்தக் கட்டாயமும் இல்லை. ஏற்கன வே அரசியல்யாப்பில் இருக்கும் அதிகாரப்பகிர்வு அம்சங்களை சரியான முறையில் நடைமுறைப்படுத்தாதவர்கள் மிக விரிந்த அதிகாரங்களைக் கொண்ட சமஷ்டி அமைப்பை உருவாக்கப் போகின்றார்கள் என்பதை நம்பக் கூடியதாக இல்லை.

எனவே **13வது திருத்தச் சட்டத்தை முழுமையான முறையில் நடைமுறைப்படுத்தும் வேலைத்திட்டத்தை இலங் கை அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ள வேண்டும்**. தேர்தல் மூலமான அரசாங்கம் இல்லாதிருந்தாலும் ஒரு மாநில அரசு கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கும் அதன் கடமைகள் செவ் வனே ஆற்றப்படுவதற்கும் மாற்று ஏற்பாடுகளுடன் மாகாண ஆட்சி யமைப்பு செயற்படும்.





இந்தியா - சீனா - இந்தியா - பாகிஸ்தான்
எல்லை கடந்த உறவு தென்னாசியாவின் புதிய அத்தியாயம்

# கிழக்கில் படுகொலைகள் தொடர்பாக கண்காணிப்புக்குழுவிடம் முறையீடு

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எப்) உறு ப்பினர்கள் புலிகளால் தாக்கப்பட்டு வருவதை உடனடியாக தடுத்துநிறு த்த யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

தமது உறுப்பினர் ஒருவர் இரண்டு தினங்களுக்கு முன்னர் பிரபா அணி சார் புலிகளால் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து ஈ.பி.ஆர்.எல்.எப் கடிதமொ ன்றை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு அனுப்பி வைத்துள்ளது.

இவ்வருடம் பெப்ரவரி மாதம் 19ம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 5ம் திகதி வரையிலான காலப்பகுதியில் தமது இயக்கத்தைச் சார்ந்த 49 பேரை கடத்திச் சென்று சித்திரவதை செய்து ள்ளதாகவும், சிலரை கொலை செய்து ள்ளதாகவும் இவ்வியக்கம் தெரிவித் துள்ளது.

எமது இயக்கத்தை சேர்ந்த 23 பேரை பிரபாஅணிசார் புலிகள் சித்திர வதை செய்து கொன்றுள்ளதோடு மூ ன்று பேரை கடத்திச் சென்று தொடர்ந் து தடுத்து வைத்துள்ளனர். நிராயுத பாணிகளான எமது உறுப்பினர்கள் மீது புலிகள் மிக இலகுவாகத் தாக்கு தல்களை மேற்கொண்டு வருகின்ற னர். இந்த மிலேச்சத்தனமான தாக்கு தல்களைத் தடுத்து நிறுத்துவதற்கு போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# சங்கிலி தெறித்ததனால் தெரியவந்த சங்கதி

நாசிகளின் கொலைமுகாம் ஒன்று வன்முறையின் மீது தீரா வெறிகொ ண்ட மனநோயாளர்கள்.

ஹாலின் றியாஸ் -24 இவரது சொந்த இடம் வேப்பங்குளம். வவு னியா. இவர் இரண்டரை மாதங்கள் முல்லைத்தீவுக் காட்டுப்பகுதியில் இரும்புக்கூண்டொன்றினுள் இரும்புச் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்தார். அவர் இதனை உடைத்து வெளியே றிவந்துள்ளார்.

மத்திய கால ரோமானிய அடிமை களை விட இவர் மோசமாக நடத்தப் பட்டுள்ளார். இவரது தந்தை புளொட் இயக்கத்தில் அங்கத்துவம் வகித்த ஒரே காரணத்திற்காகவே இவர் இவ் வாறு வைக்கப்பட்டிருந்ததாக பொ லிஸ் தெரிவிக்கிறது.

இவர் காலில் பூட்டுப்போட்ட உடைந்த சங்கிலியுடன் தப்பி வந்து வவுனியா பொலிஸில் சரணடைந்தார். இவரை வவுனியாவிற்கு வெளியில் ஆஸ்பத்திரியில் அனுமதித்து பாது காப்பும் வழங்குமாறு வவுனியா மா வட்ட நீதிபதி இளஞ்செழியின் உத் தரவிட்டுள்ளார்.

புலிகளின் சித்திரவதை கூடத்தை எப்படி வர்ணிப்பதென்பதற்கு சேது திரைப்படத்தில் காட்டப்பட்ட ஒருபடி மம் இருக்கிறது. வரலாற்றில் ரோமா னிய அடிமைகள் போன்ற சித்திரமும் பொருத்தமானது. புலிகள் ஏற்கனவே அரசிற்குரிய கட்டமைப்புக்களை வை த்திருகிறார்கள் என்று கூறும் பேரறி ஞர்கள் இதனைத் தான் குறிப்பிடுகிறார் கள் போலும். இத்தகைய காட்டுமிரா ண்டி கட்டமைப்புகளுக்கே நடேசனும், பராவும், பொட்டம்மானும் பிரபாகர னின் தலைமையின் கீழ் பொறுப்பு வகிக்கிறார்கள்.

கால்கள் இரண்டையும் சங்கிலி யால் பிணைத்து வெல் பண்ணி விடு வார்கள். அதில் ஆண் பெண் சிறுவர் கள் என்ற வேறுபாடில்லை உடைகள் சுருங்கி மேலெழுந்து விடும். உடை மாற்றல் குளிப்பு முழுக்கு ஒன்றும் கிடையாத சதா அடி உதையும் புலிப் பொறுப்பாளர்களின் தூசணை அர்ச்சனைகளையும் இவர்கள் கேட் டுக் கொண்டிருக்கவேண்டும் .

ஜெயதேவன் விவேகானந்தன் ஆகியோருக்கு நேர்ந்தது ஐரோப்பிய தமிழ் ரிபிசி உட்பட தமிழ் ஊடகங் கள் சிலவற்றிலும் லண்டன் நீதிமன்ற ங்களிலும் அம்பலமாகின.

**நன்றி: தமிழ்நியூஸ்வெப்**

தி. சிறிதரன் 141ஏ, மன்னார் வீதி, குருமன்காடு, வவுனியா. அவர்களால் இரத்தினப்பிட்டிய C.R.C Press அச்சிட்டு வெளியிடப்படுகிறது.